ublic domain. Digitization Muthulakshmi Research Acad

உ
திருச்செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ குமர குருபர சுவாமிகள்
அருளிய

கந்தர் கலிவெண்பா

[மூலமும் - உரையும்]

விலை: ரூ. 6.50

காசித்திருமடம் திருப்பனந்தாள்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

ic domain. Digitization Muthulakshmi Research Ac

உ

திருச்செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய

கந்தர் கலிவெண்பா

[மூலமும் உரையும்]

திருப்பனந்தாள்
காசித்திருமடத்து அதிபர்
"கயிலைமாமுனிவர்"
திருவளர்திரு காசிவாசி
முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்

*அவர்களின்
திருவுளப்பாங்கின் வண்ணம்
வெளியிடப்பெறுவது.*

பதிப்பாசிரியர்:

தருமபுர ஆதீனப் புலவர்
தொல்காப்பியச் செல்வர், சித்தாந்த நன்மணி,
பண்டித வித்துவான்
பேராசியர். கு. சுந்தரமூர்த்தி, எம்.ஏ.,
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி,
திருப்பனந்தாள்.

blic domain. Digitization Muthulakshmi Research Aca

ஒன்பதாம் பதிப்பு
படிகள் 3000

விலை: ரூ. 6.50

கிடைக்குமிடம்:

காசித்திருமடம்
திருப்பனந்தாள் - 612 504
தஞ்சை மாவட்டம்

ஸ்ரீ குமரகுருபரர் ஆப்செட் பிரிண்டர்ஸ்
காசித்திருமடம்,
திருப்பனந்தாள்

ic domain. Digitization Muthulakshmi Research Ac

உ

திருச்செந்திலாண்டவன் துணை

பதிப்புரை

இறைவழிபாடு ஒன்றே இன்பத்தை வழங்க வல்லது. மனக்கவலைகளை மாற்ற வல்லது. யாண்டும் இடும்பை இலாத நல் வாழ்வைப் பெறச் செய்வது. இம்மைப் பிறப்பில் இருவாதனைகளை அகற்றச் செய்வது. இறைவழிபாட்டால் இறைவனின் அருளைப் பெற அருளாளர்களால் அருளப்பெற்ற நூல்கள் பெரிதும் துணைபுரிகின்றன.

அவ்வகையில் திருச்செந்திலாண்டவன் அருளை பெற்ற ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளால் அருளப்பெற்ற அருள்நூல்கள் பலவும் யாவராலும் போற்றப்பெறும் பெருஞ் சிறப்புடையன. அவற்றுள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளால் அருளப்பெற்ற 'கந்தர்கலிவெண்பா' என்னும் இந்நூல் அன்றாட வழிபாட்டு நூலாக விளங்குகின்றது. கலி வெண்பா யாப்பில் திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கந்தப் பெருமான் மீதுபாடப் பெற்றுள்ளதால் 'கந்தர்கலிவெண்பா'எனப் பெயர் பெற்றது. இந்நூலில் ''நிறைமொழிமாந்தர் ஆணையின் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப'' என்னும் மூதுரை 'மந்திரம்' என்ற சொல்லின் தன்மையை தெளிவாக்குகின்றது. மந்திரம் என்பது தன்னை மனத்தகத்து எண்ணுவோரைக் காப்பாற்றுவது என்னும் பொருளுடையதாகும்.

இந்நூற்கண் இறைவனுக்குரிய ஐந்தெழுத்து மந்திரமும் [சிவாயநம], முருகப்பெருமானுக்குரிய ஆறெழுத்து மந்திரமும் [சரவணபவ]கூறப்பெற்றுள்ளன. ''தொல்லுலகில் ஈறும் முதலும் அகன்று எங்கும் நிறைந்து ஐந்தெழுத்தைக்கூறி நடாத்தும்'' என்னும் தொடராலும் ''ஆறெழுத்தும் அன்பினுடன் கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே'' என்னும் தொடராலும் போற்றிப் புகழ்வர். இந்நூலின் இறுதிக்கண் வேண்டப்படும் வேண்டுகோள்கள் இம்மைக்கும் மறுமைக்கும் உதவுவதோடுமுத்திப்பேற்றிற்கும்ஆளாக்குமாறுஅமைந்துள்ளது.

அருள்தன்மை வாய்ந்த இந்நூலை பெரு மக்களுக்கு வழங்கவேண்டும் என திருப்பனந்தாள் காசித்திருமடத்தின்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

அதிபர் "கயிலைமாமுனிவர்" திருவளர்திரு காசிவாசி முத்துக்குமார சுவாமித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவுளம் பற்றினார்கள். அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் இந்நூல் ஸ்ரீ கந்தர்சஷ்டி திருநாள் வெளியீடாக வெளியிடப்படுகின்றது. அன்பர்கள் இவ்வழிபாட்டு நூலை நாளும் பயின்று திருச்செந்திலாண்டவனின் நல்லருளைப் பெறுவார்களாக!

இந்நூலை அச்சிடுங்கால் அச்சுப்பிழைகளைத் திருத்தி உதவிய புலவர்.மு.குஞ்சிதபாதத்திற்கு சொக்கநாதப்பெருமான் திருவருள் நலம் உண்டாவதாகுக!

இந்நூல் வெளியீட்டுப் பணியில் அடியேனை ஈடுபடுத்தியருளிய எங்கள் தாயினும் நல்லதலைவராம் காசித்திருமடத்தின் அதிபர் திருவளர்திரு காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களின் பொன்னார் திருவடிக்கமலங்களை மன,மொழி,மெய்களால் வணங்கி மகிழ்கின்றேன்.

இங்ஙனம்,

திருப்பனந்தாள். தவத்திரு. குமாரசுவாமித் தம்பிரான்,

20.8.97 காறுபாறு ,

காசித்திருமடம்.

blic domain. Digitization Muthulakshmi Research Aca

ஆராய்ச்சி முன்னுரை

பிரபந்தம் அருளிய பேரருளாளர்:

தமிழ் இலக்கியங்களுள் பிரபந்தம் என்றொரு வகையுண்டு. பிரபந்தம் என்பது பொதுவாக நூல் என்றே பொருள்படும். எனினும் கோவை, பரணி, பிள்ளைத்தமிழ், மாலை முதலிய சிற்றிலக்கியங்களையே பிரபந்தம் என்று அழைத்தல் மரபாகவுள்ளது. இவ்வகையில் அடங்கும் இலக்கியங்கள் 96 வகைப்படும் எனப் பாட்டியல் இலக்கணம் இயம்பும். இத்தகைய இலக்கியங்களைத் தனித்தனியே பாடிய பெருமக்களும் உள். ஒன்றற்கு மேற்பட்ட இலக்கியங்களைப் பாடிய பெருமக்களும் உள். இவர்களுள் ஒன்றற்கு மேற்பட்ட இலக்கியங்களைப் பாடியருளியவர் நம் குமரகுருபர அடிகளாவர். இவர் கந்தர் கலிவெண்பா, நீதிநெறி விளக்கம், காசித்துண்டி விநாயகர் பதிகம் ஆகிய மூன்று நூல்களோடு, பிள்ளைத் தமிழில் இரண்டையும், கலம்பகத்துள் மூன்றையும், மாலையுள் இரண்டையும், கோவையுள் மூன்றையும் அருளியவராவர். இவ்வாறு பல நூல்களை அருளிய அருளாளர்களில் பிள்ளைப்பெருமாள்ஐயங்கார், சிவப்பிரகாசர், சிவஞான முனிவர், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். இவர்களுள் நம் குமரகுருபர அடிகள் செந்தில் ஆண்டவன் திருவருளை முழுமையாகப்பெற்ற பேரருளாளராவார்.

வரலாறு:

பாண்டி நாட்டில் தாமிரபருணியாற்றின் வடகரையில் ஸ்ரீவைகுண்டம் என்னும் திருப்பதியின் வடபாலில் ஸ்ரீ கைலாசம் என்னும் சிற்றூரில் இவர் தோன்றியவராவர். தந்தையார் சண்முகசிகாமணிக் கவிராயர் என்பார். தாயார் சிவகாமசுந்தரி அம்மையார் என்பார். இவ்விருவர்க்கும் தோன்றிய இவர் ஐந்தாண்டு வரை ஊமையாயிருந்தார். அதுகண்டு வருந்திய பெற்றோர்கள் இவரைத் திருச்செந்தூருக்கு அழைத்துச் சென்று

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

திருச்செந்திலாண்டவன் திருமுன் கிடத்தி குழந்தை பேச வேண்டும் என்னும் நோக்குடன் பாடு கிடந்தனர். அவ்வாறு பாடு கிடந்ததன் பயனாகத் திருச்செந்திலாண்டவன் இவருக்குத் திருவருள் சுரந்தனர். அதன் பயனாக முதன்முதல் அவரால் அருளிச் செய்யப்பெற்றதே கந்தர் கலிவெண்பா என்னும் இந்நூலாகும். அதன் பின் தம் ஊரில் எழுந்தருளியிருக்கும் கைலாசநாதர் மீது கைலைக் கலம்பகம் என்னும் நூலையும் இயற்றினர். இவர்தம் இளவலாகக் குமாரசாமிக் கவிராயர் என ஒருவர் இருந்தனர். ஓதாது உணர்ந்த ஞானச் செம்மலாகிய இவர் இறைவன் எழுந்தருளியிருக்கும் பல்வேறு திருப்பதிகட்கும் சென்று வணங்கவேண்டுமெனத் திருவுளம் கொண்டார். மதுரைக்கு வந்தார். அங்கிருந்தபொழுது மீனாட்சியம்மையின் மீது பிள்ளைத்தமிழ் ஒன்று பாடினார். திருமலைநாயக்கர் முன்னிலையில் அதனை அரங்கேற்றும்பொழுது அவ்வரசர் மடியில் மீனாட்சியம்மையே சிறு குழந்தையாக எழுந்தருளிவந்து பிள்ளைத்தமிழ் கேட்டு உள்ளம் உவந்து தம் திருக்கழுத்திலிருந்த முத்துமாலையையும் அவருக்குப் பரிசாக வழங்கி மறைந்தருளினர். மதுரையில் பின்னும் சிலகாலம் வதிந்திருந்தபொழுது மதுரைக் கலம்பகத்தை இயற்றினர். பின் திருவாரூருக்கு வந்த இவர் திருவாரூர் நான்மணிமாலையை அருளினர். அதுகாலை தருமபுரத்தில் குருமூர்த்திகளாக எழுந்தருளியிருந்தவர்கள் மாசிலாமணி தேசிகர் என்பவராவர். அவர்பால் சென்று நம் அடிகள் துறவுபெற விரும்பினர். துறவுபெறுமுன் பல திருப்பதிகளுக்கும் சென்று வணங்கிவரச் செய்தல் தருமையாதீனத்தின் மரபாகும். அம்மரபின்வழி மாசிலாமணி தேசிகர் நம் அடிகளை காசிக்குச் சென்று வழிபாடு செய்து வருமாறு பணித்தருளினர். காசிக்குச் சென்றுவர நெடுங்காலம் ஆகுமே என்று கருதிய அடிகள் தம் குருமூர்த்திகளிடம் விண்ணப்பிக்க அவரும் இரங்கிச் சிதம்பரம் வரையேனும் சென்று வருக எனப் பணித்தனர். குருமொழியை ஏற்றுச்சென்ற அடிகள் இடையே வைத்தீசுவரன் கோவிலில் வீற்றிருக்கும் முத்துக்குமாரப் பெருமான்மீது பிள்ளைத்தமிழ் ஒன்று பாடினர். பின் சிதம்பரம் சென்றார். அங்கு வதிந்த காலத்துச் சிதம்பர மும்மணிக்கோவை என்னும் நூலை அருளினர். யாப்பருங்கலக்காரிகைக்கு இலக்கியமாகக் காட்டப்பெற்ற பாடல்கள் பிறமதக்கோட்பாட்டுடனும் உலகியல் உணர்வுடனும் விளங்குதலைக் கண்ட அவ்வூர்ப் பெரியவர்கள்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

அவ்விலக்கணநூலுக்கு இலக்கியமாகக் கூத்தப்பெருமானின் புகழ்மணக்கும் பாடல்களைப்பாடியருள வேண்டும் என வேண்டிக்கொள்ள, அவ்வாறே சிதம்பர செய்யுட்கோவை என்னும் நூலை அருளினர். அது காலை பாடப்பெற்றதே நீதிநெறி விளக்கம் என்னும் நூலும் ஆகும். திருக்குறள் பிழிவாக அமைந்த இதனைத் திருமலை நாயக்கரின் வேண்டுகோளுக்கு இணங்க மதுரையில் அருளினர் என்ற கருத்தும் உண்டு. பின் தருமைக்குச் சென்று குருவருள் பெற்றுத் துறவு மேற்கொண்டார். அப்பொழுது தம் குருமூர்த்திகளைப் போற்றும் முகமாகப் பண்டார மும்மணிக்கோவை என்பதொரு பனுவலையும் அருளினார். அதன்பின் தம் குருமூர்த்திகளிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு காசிக்குச்சென்று சகலகலாவல்லிமாலை பாடி கலைமகளின் திருவருளால் இந்தி மொழிப் புலமை பெற்று, ஔரங்கசீப்பின் ஆதரவால் கங்கைக் கரையில் திருமடம் ஒன்றும் அமைத்தார். அதுகாலை காசித்துண்டி விநாயகர் பதிகத்தையும், காசிக்கலம்பகத்தையும் அருளினார். காசியில் வதிந்த காலத்து இடையே ஒருமுறை தருமைக்கு வந்து குருமூர்த்திகளை வணங்கிச் சென்றனர். 'ஞான நூல்தனை ஓதல், ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்பித்தல், தான்கேட்டல், நன்றாம் ஈனமிலாப் பொருள்தனைச் சிந்தித்தல், ஐந்தும் இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை' என்னும் ஞானநூல். இதற்கேற்ப அடிகள் இத்தகைய ஞானபூசையைச் செய்தருளி சிவயோகத்தமர்ந்திருந்து ஒரு வைகாசித்திங்களில் கிருட்டிணபட்சத்துத் திருதியையில் இறைவனடி அடைந்தார்.

நூல்கள்:-

இவரருளிய நூல்கள் பதின்மூன்றாகும். அவை கந்தர் கலிவெண்பா, கைலைக் கலம்பகம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறிவிளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பர செய்யுட்கோவை, பண்டார மும்மணிக்கோவை, காசிக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை, காசித்துண்டி விநாயகர் பதிகம் எஃபன. இவற்றுள் கைலைக் கலம்பகத்துள் சில பாடல்களே கிடைக்கின்றன. காசித்துண்டி விநாயகர்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

பதிகம் முழுமையாகக் கிடைத்திலது. இவையன்றி மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மீனாட்சியம்மைகுறம், சிவகாமியம்மை இரட்டை மணிமாலை ஆகிய மூன்று நூல்களும் இவரால் பாடப்பெற்றன என்ற கருத்தும் உண்டு. எனினும் திருப்பனந்தாள் காசித்திரு மடத்தில் உள்ள பழமையான ஏட்டுச் சுவடிகளில் இம்மூன்று நூல்களும் காணப்படாமையானும், வழிவழியாகப் பாடம் சொல்லி வரும் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளைபோன்ற பேரறிஞர்களுக்கு இந்நூல்கள் நம் அடிகளால் செய்யப்பட்டன அல்ல என்னும் கருத்து நிலவுதலானும் இந்நூல்கள் இவரால் அருளப் பெற்றன அல்ல என்பர் டாக்டர் உ.வே.சா. அவர்கள்.

நூற்சிறப்பு:

குமர குருபர அடிகள் அருளிய நூல்கள் பலவும் பலராலும் போற்றப் பெறும் பெருஞ்சிறப்புடையன ஆகும். அவற்றுள் கந்தர் கலிவெண்பா முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், சகலகலா வல்லி மாலை ஆகிய நான்கு நூல்களும் வழிபாட்டு நூலாக விளங்கும் சிறப்புடையன. திருக்குறளுக்குப் பின் அறநெறியை வகுத்துக் கூறுதற்கென எழுந்த நூல்கள் பலவேனும் அடிகள் அருளிய நீதிநெறி விளக்கம் பலராலும் போற்றப்பெறும் சிறப்புடையது ஆகும். இவரருளிய நூல்களுள் சமயமணம் மீதூர்ந்து நிற்கும். இலக்கியநலம் அதன் அடித்தளமாக அமைந்து விளங்கும். ஆங்காங்கு அமைந்து விளங்கும் அணிநலன்கள் படிப்போர் தம் சிந்தையை ஈர்த்து இனிமை பயக்கும்.

கந்தர் கலிவெண்பா:-

திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் கந்தப்பெருமான் மீது கலிவெண்பா யாப்பில் இந்நூல் பாடப்பெற்றது. ஆதலின் இப்பெயர் பெற்றது. இது 122 கண்ணிகளை உடையது. சாத்திர மணம், தோத்திரமணம், வரலாற்று மணம் ஆகிய மும்மணங்களும் ஒருங்கு கமழ நிற்பது. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலும், இடத்திற்கேற்ற உவமை காட்டி இனிது விளக்குதலும்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

அடிகள்பால் அமைந்த தனிச்சிறப்பாகும். அதனை இந்நூலில் மிக அழகாகக் காணலாம். இந்நூலின் இறுதிக்கண் வேண்டப்படும் வேண்டுகோள்கள் இம்மைக்கும் மறுமைக்கும் உதவுவதோடு முத்திப்பேற்றிற்கும் ஆளாக்குமாறு அமைந்துள்ளது. ஆதலின் இந்நூலை நாளும் வழிபாட்டு நூலாகக் கொள்வார் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வர். அவர் எண்ணும் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை என்பது ஒருதலை.

அ. சாத்திர மணம்:

சாத்திரம் என்பது ஒன்றன் இயல்பினை முழுமையாகவும் தெளிவாகவும் விளக்குவதாகும். வானசாத்திரம் மனைசாத்திரம் என வழங்குவன காண்க. நம் சைவ சமய சாத்திரம் இறை[பதி], உயிர்[பசு], தளை[பாசம்] என்னும் முப்பொருள்களின் இயல்புகளை முழுமையாகவும், தெளிவாகவும் விளக்குவன ஆகும். இம்முப்பொருள்களின் உண்மை இந்நூலில் ஆங்காங்கு விளக்கப் பெற்றுள்ளன.

1. இறை:

இறைவன்தன்முனைப்பாலும், உலகியல் அறிவாலும் காண்பற்கரியனாக இருக்கின்றான். அவனேதன்முனைப்பற்று அன்பின்வழி அணுகுவார்க்கு எளியனாய் இருக்கின்றான். இதனை ஞான நூல்கள் ஒருதலையாகக் கூறும். கந்தர் கலிவெண்பாவின் முதல் கண்ணிகளில் இந்நிலை விவரிக்கப்படுகின்றது. பரம்பொருள், புத்தேளும் பழமறையும் நாதமும் நாதாந்த முடிவும் போதமும் காணத போதமாகவும், ஆதிநடு அந்தம் கடந்த நித்தியானந்த போதம் ஆகவும் உள்ளது. அறிவுக்கு அனாதியாயும் ஐந்தொழிற்கு அப்புறமாயும் மனாதிகளுக்கு எட்டாவடிவாயும் இருப்பது. எஞ்சாத பூரணமாய் நித்தமாய்ப் போக்கும் வரவும் புணர்வும் காரணமுமில்லாக் கதியாய் இருப்பது. முந்தும் கருவின்றி நின்ற கருவாய் நிற்பது. இவை அப் பரம்பொருளின் அருமையை நுவலுவன. ஒரு குறியும் ஒரு குணமும் ஒரு கோலமும் அற்று எங்கும் செறியும் பரமசிவமாய் நிற்கும் இப்பரம் பொருள், எவ்வுயிர்க்கும் தஞ்சமென நிற்கும் தனிப்பொருளாய் விளங்குவதும், அருள்வடிவாய ஐவகை வடிவு கொண்டு தன் அறிவு [illegible]

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

செயல்களால் உயிர்களை ஒடுக்கவும் நுகரவும் படைக்கவும் செய்வதும் அதன் எளிமையையும் கருணையையும் காட்டுகின்றன.

i. வடிவு:

அவன்கொள்ளும் வடிவு அரு,உரு,அருவுரு என்னும் மூன்றுமாம் அவற்றைக் கொண்டது நம் தம் கருமேனி கழிக்கவே ஆம். அத்தகையோன் எங்கும் நீக்கமற நிற்றலின் எல்லாப் பொருள்களுமாய் நிற்கின்றான். ஆறுவழிகளின் வடிவாகவும் நிற்கின்றான். அவன் அண்டங்களே உருவாகவும், அவ்வண்டங்களிலுள்ள பொருள்களே உறுப்பாகவும், அவனுக்குரிய அறிவு இச்சை செயல்களே மனமொழி மெய்களாகவும் கொண்டு நிற்கின்றான். இவ்வாறு நிற்பது தொண்டுபடும் உயிர்களுக்கு அறிவளிப்பதற்கேயாம். நிலன் நீர் தீ வளி முதலிய எண்வகை வடிவும் அவனது வடிவேயாம். இறைவனின் திருவுருவை இவ்வாறெல்லாம் காட்டுவதோடு, முருகப்பெருமானின் திருவுருவையும் அடிகள் தம் உள்ளக் கிழியில் உருவெழுதிக் கண்டவாறு நமக்கும் காட்டியருளுகின்றார். 37–வது கண்ணி முதல் 57–வது கண்ணிவரை அவ்வளம் தரும் தெய்வீக வடிவு காட்டப்பெற்றுள்ளது.

ii. தொழில்:

அவன் உயிர்களுக்காகவே ஐந்தொழில் இயற்றுகின்றான். ஐவரை நிறுவி அவர்களால் அவற்றைச் செய்தருளுகின்றான். இவற்றை நினைவுமாத்திரையாகச் செய்தலால் , தான் எவ்வாற்றானும் அவற்றுள் தோய்வுற்று இருப்பனல்லன்.

iii. பத்துவகை உறுப்புகள்:

உலகியலில் ஆட்சி செலுத்துவார்க்கு இருக்கும் அரச உறுப்புக்கள் பலவும் உளவாதல் போல, இறைவனுக்கும் பத்து வகை உறுப்புக்கள் உளவாம். வடநூலார் இவற்றைத் தசாங்கம் என்பர். அன்பர் உளத்தில் புகுதற்கேற்கும் இன்ப மலையே மலையாம் அவ்வாறு புகுந்து நிற்பதால் அடியவற்கு உளதாம்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

பேரின்பப்பெருக்கே ஆறாம். அவ்வின்பப் பெருக்கை வழங்கியருளுதற்குரிய இடமே திருநாடாம். அந்நாட்டுள் போக்கும் வரவும் அற உயர்ந்து விளங்கும் நிலையே திருநகராம். திருவைந்தெழுத்தைக் கூறி நடாத்தும் யோகியர்களின் உயிர்க்காற்றே குதிரையாம். ஐவகை மலங்களையும் உயிர்க்குப் போக்கியருளும் சிவஞானமே யானையாம். இறைவனது நிறைவுள் அடங்கி அதன்வழிவரும் அறிவே மலராய், அன்பே நாராய்க் கொண்டு தொடுக்கும் அன்பர்தம் மாலையே மாலையாம். ஐந்தொழிலையும் ஓவாது நடத்தியருளும் ஆணையே கொடியாம். உயிர்க்குப் படைப்பினை வழங்கும்பொழுது ஏற்படும் புதுமையான நாத ஒலியே முரசாம். உலகைப் படைத்தருளும் ஆணையே ஆணையாம்.

2. உயிர்:

உயிர் வினையில் கட்டுண்டு நிற்கும் நிலை கேவல நிலையாகும்.

வினைநீக்கத்திற்கென இறைவன் கொடுத்தருளும் உடலைக் கொண்டு வாழும் நிலை சகல நிலையாகும். வினைநீக்கம் பெற்ற இறையடி இன்பத்தைப் பெறுவதே சுத்தநிலையாகும். பதினோறாவது கண்ணியின் தனிச்சொல்லிலிருந்து 33வது கண்ணியின்தனிச்சொல்லிற்கு முன்னிற்கும் தொடர்வரை இம்மூவகை நிலைகளும் விவரிக்கப்படுகின்றன. இம்மூவகை நிலையையும் ‘மூன்றவத்தையும் கழற்றி’ என்னும் தொடரால் தொகுத்துக் காட்டுவர். மலப்பிணியால் உயிர்கள் மூவகைப் படுத்தப்பட்டுள்ளன. ஒருமலமுடைய விஞ்ஞானகலரும், இருமலமுடைய பிரளயாகலரும், மும்மலமுடையார்க்கு இருவினை ஒப்பும் மலபரிபாகமும் வரச்செய்து குருநாதனாக வந்து ஆட்கொள்ளுவன். இதனை 12ஆவது கண்ணியின் தனிச்சொல் முதல் 21ஆவது வரையுள்ள கண்ணிகள் விவரிக்கும். இருமலமுடையார்க்கு முன்னின்று அருளுவன். இதனை30 முதல் 32ஆவது கண்ணியின்முதற்பகுதி வரையுள்ள பகுதி விளக்கும். ஒரு மலமுடையார்க்கு உள்நின்று உணர்த்துவன. இதனை 32ஆவது கண்ணியின் முற்பகுதியும் 33ஆவது கண்ணியும் விளக்கும்.

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

3. தளை:

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றையும் தளை என்பர். உயிர் தான் செய்யும் வினைக்கீடாக நால்வகைப் பிறப்புக்களில், எண்பத்து நான்கு இலக்கம் உடல் வேறுபாடுகளை அடைகின்றன. செய்த வினைக்கேற்ப உடல் பெற்ற உயிர்அவ்வுடலோடு கூடி வாழும் பொழுதே மேலும் வினைசெய்கின்றது. இவ்வாறு காரண காரியத் தொடர்ச்சியாய் உயிர்க்கு உடல் கிடைக்கும் நிலை ஏற்படுகின்றது. இங்ஙனம் உடல் மாறி மாறி வருவதற்குக் காற்றாடியும் வண்டியின் உருளையும் உவமைகளாயுள்ளன.

i. ஆணவம்:

இது உயிரின் அறிவை மறைத்தற்கு உரியது. தொன்மையானது. உயிரினின்றும் எஞ்ஞான்றும் நீங்காதது. முத்தி நிலையினும் வறுத்தவித்தெனத் தன்வலி கெட்டு உயிரோடு இருப்பது. ஆதலின் இதனை 'இருள்மலம்' என்றும், 'ஆணவமான படலம்' என்றும், 'விடுத்தகலாப் பாச இருள்' என்றும், 'மூத்த கருமமலம்' என்றும் அடிகள் குறித்தனர். உடற்கருமையோடு ஆணவத்தால் உள்ளக் கருமையும் உடையனாய் சூரபதுமன் இருந்தனன். ஆதலின் அவனைக் 'காரவுணன்' என்ற சொல்லால் குறித்தார்.

இவ்வருமையும் ஈண்டு நினைந்து இன்புறுதற்குரியது.

ii. கன்மம்:

ஆணவ நீக்கத்திற்காக உடலெடுத்த உயிர்நல்வினை, தீவினையாகிய இரண்டையும் இயற்றும். 'இருவினையும் ஒத்து வரும் காலம்' என்ற தொடரால் இவ்விருவினையையும் அடிகள் குறிப்பர். இவ்விருவினையும் உயிரை உடலொடு கட்டுவிக்கும் கட்டாயிருத்தலின் 'கருமமலக்கட்டு' என்றும் அடிகள் குறிப்பர். இவ்வினைகள் இறையருளினாலோ அன்றித் துய்த்துத் தொலைத்தலினாலோ அன்றி மாளாவாதலின் 'தீர்வரிய கன்மம்' என இதன் இயல்பை விளக்கினர். உயிர்ஈட்டிய வினையைப்பழவினைநுகர்வினை வருவினை என மூவகைப் படுத்துவர். இம்மூன்றனுள் குருமூர்த்திகளின் திருவருளால் பழவினையும், அவர்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

அருளும் அருள்வழி நிற்றலால் வருவினையும் நீங்கும். பழவினை நீக்கத்தைத் 'திருநோக்கால் ஊழ்வினையைப் போக்கி' 'ஊழ்வினையை மாற்றி' என வரும் தொடர்களால் குறிப்பர்.

iii.மாயை:

இதுவும் தளை எனப்படினும் உயிர் வினைநீக்கம் பெறுவதற்கு ஓரளவு விளக்கம் தருவதாகும். 'விடிவாமளவும் விளக்கனைய மாயை' என ஞான நூல் குறிப்பதும் இதுபற்றியாம். எனினும் உயிர் வீடு பெறுங்கால் இதுவும் கழிதற்குரியதேயாம். ஆதலின் ஆசிரியர் ஏனைய இரு மலங்களோடு இதனையும் இயைத்து 'மும்மைப் பெருமலங்கள் மோசித்து' என்றார்.

நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளல்:

இறைவன் ஒருவன் உளன், அவனை அடைவதே உயிர் பெறும் பயன் என்னும் நினைவு தோன்றுவதே அருமையாகும். அங்ஙனம் தோன்றினும் சமயக் கணக்கர்கள் தத்தம் வழியில் ஈர்க்கும் பொழுது எது உண்மைச் சமயம் எனத்துணிதல் அதனினும் அருமையாகும். இவ்வாறு தெளிதற்கும் துணிதற்கும் இறைவன்அருள் இன்றியமையாது வேண்டப் படுவதாகும். தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாயபின் இத்தகைய அலக்கண்கள் நேருவதைத் திருவாசகம் விரித்துக் கூறும். நம் அடிகளும் இதனைத்தொன்னூல் பரசமயம் தோறும் அதுவதுவே நன்னூல் எனத் தெரிந்து நாட்டுவிக்கும் எனவும், அவற்றினின்றும் உய்தற்கும் இறைவன் அருளுவன் எனவும் கூறுவர்.

ஆ. தோத்திர மணம்:

இறைவன் உயிர்க்கு அருளும் கருணை, செய்யாமற்செய்வதும் காலத்தினாற் செய்வதும், பயன் தூக்காது செய்வதும் ஆகும். அவ்வாறு செய்தருளும் பேருதவிக்குக் கைம்மாறாக உயிர்களால் செய்யத் தக்கது யாதும் இல்லை. தனக்கு கொடுக்கப்பட்டிருக்கும் மனத்தால் நினைத்தலும், மொழியால் போற்றலும், மெய்யால்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

வணங்கலுமே அவனுக்குச் செய்யத்தக்கனவாம். இவ்வாறு செய்வனவற்றுள் மனத்தால் எண்ணியும் மொழியால் போற்றியும் வருதலைத் தோத்தரித்தல் [ஸ்தோத்தரித்தல்] என்பர். தோத்தரித்தல் –புகழ்ந்து பாடல். போற்றியுரைத்தல். இந்நூலில் இவ்வாறு வரும் போற்றி உரை பலவாகும். தனிச்சுடரே! எவ்வுயிர்க்கும் பின்னமற நின்ற பெருமானே! தெய்வ விளக்கொளியே! ஐந்தொழிற்கும் நீங்காத பேருருவாய் நின்றோனே! அத்துவாவின் நிலையே வடிவமாய் நின்றோய்! ஐந்தொழிலும் ஏவித் தனி நடத்தும்எங்கோவே! அட்டமூர்த்தமாம் வாழ்வே! அட்டயோகத் தவமே! விபுதர் தனித்தனியே பேசும் தசாங்கமெனப் பெற்றோனே! உள்ளம் உவப்ப உயர்ந்தோனே! கிடாயதனை எண்திக்கும் நடத்தி விளையாடும் நாதா! படைப்போனைக் குட்டிச் சிறை'பிருத்தும் கோமானே! புரிசடையோன் போற்றிசைப்ப முன்னம் பிரமம் மொழிந்தோனே! வீரவடிவேல் விடுத்தோனே! விசய வீரனைத் தூதாக விடுத்தோனே! பானு பகைவன் முதலாய பாலருடன் சிங்கமுகனை வென்று வாகை முடித்தோய்! சூருடலம் கீண்ட சுடர் வேலோய்! சித்ரமயில் வாகனமாய் ஏறி நடாத்தும் இளையோனே! சேவலைப் பதாகையெனத் தனித்துயர்ந்த மேலோனே! தேவர் சிறைவிடுத்து ஆட்கொண்டளித்த தேவே! சைவக்கொழுந்தே! தவக்கடலே! தெய்வக் களிற்றை மணம் செய்தோனே! வள்ளிக்கொடியை மணந்தோனே! உள்ளம் உவந்து ஆறுதிருப்பதி கண்டு ஆறெழுத்தும் அன்பினுடன் கூறுமவர் சிந்தைகுடி கொண்டானே! செந்திப் பதிபுரக்கும் செவ்வேளே! எனப் பலவாறாகப் புகழ்ந்து அடியேற்கு முன்னின்றருள் என வேண்டிக்கோடலின் இந்நூல் தோத்திர நூலாயிற்று.

மந்திரங்கள்:

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப, மந்திரம் என்பது தன்னை மனத்தகத்து எண்ணுவோரைக் காப்பாற்றுவது என்னும் பொருள் உடையதாகும். இந்நூற்கண் இறைவனுக்குரிய ஐந்தெழுத்து மந்திரமும் [சிவாயநம], முருகப்பெருமானுக்குரிய ஆறெழுத்து மந்திரமும் [சரவணபவ] கூறப்பெற்றுள்ளன. திருவைந்தெழுத்து கூத்தப் பெருமானின் திருவடிவாக அமையும் சிறப்புடையது. அப்பெருமான் ஆதியும் அந்தமும்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

இல்லாதவன். எங்கும் நிறைந்து நிற்பவன் ஆதலின் அப்பெருமான் திருவடிவாக விளங்கும் திருவைந்தெழுத்தும், 'தொல்லுலகில் ஈறும் முதலும் அகன்று எங்கும் நிறைந்து ஐந்தெழுத்தாய்' விளங்குகிறது என அடிகளால் போற்றப்பெறுகின்றது. ஆறெழுத்து மந்திரத்தை, 'ஆறெழுத்தும் அன்பினுடன் கூறுமவர் சிந்தை குடிகொண்டோனே' என்னும் தொடரால் போற்றிப் புகழ்வர். இத்திரு மந்திரங்கள் ஐந்தெழுத்தும் ஆறெழுத்தும் உடையவேனும் தம்முள் வேறுபாடு இன்றிப் போற்றற்குரியவாம். இதனை,

நன்முகம் இருமூன்று உண்டால் நமக்கவை தாமே கந்தன்
தன்முக மாகி உற்ற தாரகப் பிரமம் ஆகி
முன்மொழி கின்ற நம்தம் மூவிரண்(டு) எழுத்தும் ஒன்றாய்
உன்மகன் நாமத்(து) ஓராறு எழுத்தென உற்ற தன்றே.

உற்பத்திக்காண்டம்– திருவிளையாடல் படலம்

என வரும் கந்த புராணப் பாடலால் அறியலாம். இதுவன்றிப் புறத்ரே காணப்பெறும் ஆறு திருப்பதிகளையும் அகத்தே காணப்பெறும் ஆறு ஆதாரங்களாகவும், அவற்றில் இவ் ஆறெழுத்து மந்திரம் இடம் பெற்றிருப்பதாகவும் அறிஞர்கள் கூறுவர். மூலாதாரம்– திருப்பரங்குன்றம். இங்குச் சகர ஒலி அமையும். சுவாதிட்டானம்– திருச்செந்தூர். இங்கு ரகர ஒலி அமையும். மணிபூரகம் – திருஆவினன்குடி. இங்கு வகர ஒலி அமையும். அனாதகம்– திருவேரகம். இங்கு ணகர ஒலி அமையும். விசுத்தி– குன்றுதோறாடல். இங்குப் பகர ஒலி அமையும். ஆக்ஞை– பழமுதிர்சோலை. இங்கு வகரஒலி அமையும். இவ்வாறெல்லாம் கருதியுணரவும் மனத்தகத்து இடையறாது எண்ணவும் இம்மந்திரங்கள் அமைந்துள்ளன. இவ்வாற்றானும் இது தோத்திர நூல் என அமையும்.

இ. வரலாற்றுமணம் :

கந்தபுராணம் ஆறுகாண்டங்களையுடையது. .10345 பாடல்களையுடையது. இப்பெருநூலில் காணப்படும் வரலாற்றை 74வது கண்ணியின் தனிச்சொல் முதல் 108வது

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

கண்ணி வரையுள்ள 35 கண்ணிகளால் மிகச் சுருக்கமாகவும் அழகாகவும் அடிகள் அருளியுள்ளார்.

தட்சகாண்டம்:- இது நூலின் இறுதியிலுள்ள ஆறாவது காண்டமாகும். எனினும் விண்ணவர்களைச் சூரபதுமன் துன்புறுத்துவதற்குரிய காரணம் இக்காண்டத்திலேயே விவரிக்கப்படுகின்றது. ஆதலின் இதுவே முன்மொழிந்து கோடற்குரிய பகுதியாம். அசுரகாண்டம்:- இது கந்த புராணத்தின் இரண்டாவது காண்டமாகும். சூரபதுமன் முதலிய அசுரர்களின் தோற்றமும் அவர்கள் பெற்ற வரமும் வாழ்வும் விண்ணவர்களைத் துன்புறுத்திய விதமும் இதன்கண் விரித்துரைக்கப்படுகின்றன. இவ்விரு காண்டங்களின் வரலாற்றை உள்ளடக்கிய தொடரே, 'வெந்தகுவர்க்கு ஆற்றாத விண்ணோர்' என அடிகள் அருளும் தொடராகும். வெந்தகுவர் எனவே அவர் யார்? என்ற வினா எழும். அவருக்கு ஆற்றாத விண்ணோர் எனவே அவர்கள் ஆற்றாதவாறு செய்த துன்பங்கள் எவை? அவ்வாறு அவர்கள் துன்புறுத்தப்படுதற்குக் காரணம் என்ன? என்ற வினாக்கள் எழும். இவற்றிற்கெல்லாம் விளக்கமாக அமைந்ததே இவ்விரு காண்டங்கள் ஆகும். உற்பத்திக்காண்டம் இது கந்தபுராணத்தின் முதற்காண்டமாக விளங்குவதாகும். வெந்தகுவர்க்கு ஆற்றாத விண்ணவர்கள் இறைவனிடம் முறையிட, அப்பெருமானும் ஐந்து முகத்தோடு, அதோமுகமும் கொண்டு, அம்முகங்களினின்றும் ஆறுதீப்பொறிகள் எழுமாறு செய்து அப்பொறிகள் சரவணப்பொய்கையில் கருணைகூர்முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டு ஒரு திருமுருகனாக விளங்க அருளினன். அவ்வாறு தோன்றிய பெருமானின் பெருமையும் அப்பெருமானின் விளையாடல்களும், அப்பெருமான் இறைவன் ஆணைவழி நின்று தாரகனை அழித்துத் திருச்செந்தூருக்கு எழுந்தருளுவதும் ஆகிய வரலாறுகளை அடிகள் 75 முதல் 95 வரையுள்ள 21 கண்ணிகளில் சுருங்கிய சொற்களால் பொருள் விளங்க விரித்துக் கூறியருளுகின்றார். அசுரகாண்டம்:- இக்காண்டத்தின் இறுதியிலுள்ள அமரர் சிறை புகு படலத்தில் வியாழன் மூலம் அசுரர்களின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் கேட்ட முருகப்பெருமான் இந்திரனுக்கு அஞ்சல் அளித்தான் எனக் கூறப்படுகிறது. இதனையே, 'வெள்ளைக் கயேந்திரனுக்கு அஞ்சல் அளித்து' என்ற தொடரால் அடிகள் அருளுகின்றார். மகேந்திர காண்டம்:-

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

முருகப்பெருமானின் ஆணைவழி வீரவாகுதேவர் சூரபதுமனிடத்தில் தூது சேரலும் அதற்கு அவன் இணங்காமையும் இக்காண்டத்தில் விவரிக்கப்படுகின்றன. இதனை 96வது கண்ணியின் தனிச்சொல் முதல் 98வது கண்ணியின் முற்பகுதி வரையுள்ள கண்ணிகளில் அடிகள் விளக்குகின்றார். யுத்தகாண்டம்:- வானவரை வணங்காத சூரபதுமனின் நால்வகைப்படைகளையும், அவன் மகன் பானுகோபன், அவன் தம்பி சிங்கமுகன், ஆகியோரையும் அழித்துத் தேவர்களைச் சிறைவீடு செய்த பகுதி இக்காண்டத்தில் விவரிக்கப்படுகிறது. இதனை 98வது கண்ணியின் பிற்பகுதி முதல் 103வது கண்ணி வரையுள்ள ஆறுகண்ணிகளில் அடிகள் அருளுகின்றார். தேவகாண்டம்:- சிறைமீட்ட விண்ணவரை விண்ணுலகத்திற்குக் குடியேற்றுதலும் தெய்வயானை அம்மை திருமணமும் இக்காண்டத்தில் விவரிக்கப்படுகின்றது. இதனை 104, 105வது கண்ணிகளில் அடிகள் அருளுகின்றார். தட்ச காண்டம்:- இதன் இறுதியில் உள்ளது வள்ளியம்மையின் திருமணப்படலமாகும். இதனை 105வது கண்ணியின் தனிச்சொல் முதல் 108வது கண்ணி வரையுள்ள பகுதிகளில் அடிகள் சுவைபடக் கூறுகின்றார். இவ்வாறு கந்தபுராணக் கருத்தை விரித்து விளக்க வேண்டிய இடத்தில் விரித்துரைந்தும், சுருக்கிக் கூற வேண்டிய இடத்தில் சுருக்கி உரைத்தும் அடிகள் கூறியருளியிருக்கும் திறம் பாராட்டுதற்குரியதாகும்.

அணிநலம்:-

அடிகளின் திருவாக்கில் அணிகள்பல அமைந்துள்ளன. முருகப்பெருமானின் ஆறு திருமுகங்களும், பன்னிரு திருக்கரங்களும் கூறப்பட்டிருக்கும் பகுதி உள்ளதை உள்ளவாறு கூறியிருக்கும் பகுதியாகும். அப்பகுதி தன்மையணியின்பாற்படும். அடுத்து இவர் கூறும் உவமைகள் மிகச்சுவையடையன ஆகும். பொருளை விளக்குதற்கு என அமைந்த இவ்வுவமைகள் இனிமையுடையனவாய் இருப்பதோடு யார்க்கும் விளங்கும் எளிமையுடையனவாயும் உள்ளன. 1. தாரணியில் இந்திரசாலம் புரிவோன் யாவரையும் தான் மயக்கும் தந்திரத்தில் சாராது சார்வது போல். 2. கறங்கும் சகடமும் போல். 3. பூத்த பவளப்பொருப்பு ஒன்று வெள்ளி வெற்பில் வாய்த்தனைய. 4. பருவமலர்ப் புண்டரீகம்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

பன்னிரண்டு பூத்தாங்கு. 5. பருதி பலவும் எழுந்து சுடர் பாலித்தாற் போல. 6. சோதி இளம்பருதி நூறாயிரங்கோடி போல. 7. பூங்குயில் போல். 8. தேய்ந்த பிறைத்துண்டம் இருமூன்றும் நிரைதோன்றப் பதித்தனைய. 9. நீக்கமின்றி ஆடி நிழலசைப்பான் போல் . இவற்றுள் 3,4,5,6,8 என்ற எண்களுக்குரியன இல்பொருள் உவமைகளாம். முருகனுக்குரிய தசாங்கங்கள் இவையெனக் கூறும் பகுதி உருவக நலம் அமைந்தது. 'தோய்ந்து களித்தோர் துதிக்கையினாற் பஞ்சமலம் காய்ந்த சிவஞானக் கடாக் களிறும்' என வரும் பகுதி சிவஞானத்திற்கும் யானைக்கும் சிலேடையாய் அமைந்துள்ள பகுதியாகும்.

அழகு நலம்:-

நூலிற்குரிய பத்துவகை அழகுகளில் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்பது ஒன்றாகும். கந்தபுராண வரலாற்றை அடிகள் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கும் திறம் வரலாற்று மணம் என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது. இதுவன்றி அடிகள் ஆங்காங்கு அருளியிருக்கும் தொகைச்சொற்கள்பலவும் இவ்வழகுபற்றிக் கூறியனவே ஆகும். இருவினை மலர்க்கண் மூன்று, மூன்றவத்தை, ஈரிரண்டு தோற்றம், நால்வகையாம் சத்திநிபாதம், ஐந்தொழில், பஞ்ச வித ரூபம், ஓதிய ஐந்து ஓங்காரம், பஞ்ச மலம், ஐந்து இலக்கணம், ஆறு அத்துவா, அத்துவாக்கள் இருமூன்று, ஆறு திருப்பதி, ஆறெழுத்து, எழுபிறப்பு, நிலம் ஏழு, உடல் அறுபத்துஎட்டு, ஆரவந்த நான்கு நூறாயிரம் என வருவன காண்க.

இவ்வாறு நவில்தொறும் சொற்சுவையும் பொருட்சுவையும் நனி விளங்குமாறு இவ்வருள் நூலை அடிகள் அருளியிருக்கும் திறம் எண்ணி மகிழ்தற்குரிய தொன்றாகும்.

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

உ

திருச்செந்திலாண்டவன் துணை

கந்தர் கலிவெண்பா

மூலமும் உரையும்

இறை இயல்பு

1. பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும்– தேமேவு

2. நாதமும்நா தாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமும் காணாத போதமாய் – ஆதிநடு

3. அந்தம் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தம் தணந்த பரஞ்சுடராய் – வந்த

4. குறியும் குணமும்ஒரு கோலமும்அற்[று] எங்கும்
செறியும் பரம சிவமாய் – அறிவுக்கு

5. அனாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மனாதிகளுக்[கு] எட்டா வடிவாய்த் – தனாதருளின்

6. பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்கும் தனிப்பொருளாய்– எஞ்சாத

7. பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்புணர்வும்
காரணமும் இல்லாக் கதியாகித் – தாரணியில்

8. இந்திரசா லம்புரிவோன் யாவரையும் தான்மயக்கும்
தந்திரத்தில் சாராது சார்வதுபோல – முந்தும்

9. கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த் – திரிகரணம்

10. ஆகவரும் இச்சை அறி[வு] இயற்ற லால்இலய
போகஅதி காரப் பொருளாகி – ஏகத்[து]

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

11. உருவும் அருவும் உருவருவம் ஆகிப்
பருவ வடிவம் பலவாய்

பொழிப்புரை:-

பொலிவுமிக்க செந்தாமரையின்கண் வீற்றிருக்கும் நான்முகனும் [திருவருள் உணர்வால் அன்றி உலகியல் உணர்வால்] தெளிதற்கரிய யாப்பு அமைவு பொருந்திய தெய்வத்தன்மை வாய்ந்த பழைய வேதங்களும், தெய்வத்தன்மை அமைந்த நாத தத்துவமும், அந்நாத தத்துவத்தின் முடிவாக விளங்கும் மெய்ப்பொருளும், வினைமாசு நீங்கிய உயிரறிவும் காண இயலாத அறிவு வடிவாய்; தோற்றம், நிலைபேறு, அழிவு எனும் மூன்றும் கடந்த மெய்யறிவு இன்பமாய்; இயல்பாகவே வினையினின்றும் நீங்கிய பேரொளிப் பிழம்பாய்; உயிர் தன் அறிவால் இப்பெயர் உடையன்எனவழங்கிவருவதொரு பெயரும், ஒரு குணமும், ஒரு உருவும் இல்லாமல் எங்கும் நிறைந்திருக்கும் மேலான சிவபரம் பொருளாய், கால எல்லைக்கு உட்பட்ட எவ்வறிவிற்கும் எட்டாத காலம் கடந்த பேரறிவுப் பொருளாய்; [உயிர்களை ஈடேற்றுவதற்கெனச் செய்தருளும்] ஐந்தொழிற்கும் அப்பாற்பட்டதாய்; கால எல்லைக்கு முற்பட்ட காலந்தொட்டு மனம் முதலிய கருவிகட்கு எட்டாத வடிவாய்; தனது பேரருளால் ஐவகையான திருவுருவைக் கொள்ளும் பேரின்ப வடிவாய்; எல்லா உயிர்கட்கும் பற்றுக்கோடு எனக் கருதுமாறு நிலைபெற்றிருக்கும் ஒப்பற்ற மெய்ப்பொருளாய்; குறைவிலாத நிறைவாய்; என்றும் உள்ளதாய்; இறப்பும், பிறப்பும், பற்றும் , தான் பிறத்தற்கொரு காரணமும் இல்லாத தனிப்பேறு உடையதாய்; இவ்வுலகத்தில் இந்திரசால வித்தையைச் செய்பவன் எல்லோரையும் மயக்குகின்ற வித்தையில் தான் மனம் பொருந்தாதிருந்தும், அவ்வித்தையைக் காண்போருக்கு அவ்வித்தையில் மனம் பொருந்தி நிற்பவனாய்க் காட்டுவதுபோலத் [தான்செய்யும் செயலுடையதாய்:] தனக்கு முற்பட்ட மூலப்பொருள் எதுவுமின்றி எல்லாப் பொருளுக்கும் தானே மூலப்பொருளாய்; வினைவயத்தாலாயவடிவின்றி அருள் வயத்ததாய் நிற்கும் திருவடிவு உடையதாய்; உயிர் செயலாற்றுதற்கென மன

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

மொழி மெய்யென்னும் முக்கருவிகள் அமைந்திருப்பது போலத் தனக்கமைந்திருக்கும் விருப்பம் அறிவு தொழிற்பாடு ஆகிய மூன்று ஆற்றல்களால் ஒடுக்கம், நுகர்வு, செயற்பாடு ஆகிய மூவகைச் செயல்களைச் செய்யும் பொருளாய்; ஒப்பற்றதொரு வடிவிலிருந்தே உரு,அரு,அருவுரு ஆகிய மூவகை வடிவும் கொண்டு அவற்றால் உயிர்களின் தகுதிக்கேற்ப அருள் வழங்கும் பல்வேறு திருவுருவங்களை உடையதாய் ; [என்றவாறு]

விளக்கவுரை:

சிவபெருமானுக்கும் முருகப்பெருமானுக்கும் வேற்றுமையின்மையின், சிவபெருமானுக்குரிய சிறப்புக்கள் பலவும் முருகப்பெருமானுக்கு ஏற்றிக் கூறப்படுகிறது. 1-36; 59-65 ஆகிய கண்ணிகள் இந்நிலையில் அமைந்துள்ளன.

குமரகுருபரர் செந்திலாண்டவன் திருவருளால் ஊமை நீங்கப்பெற்ற அமையத்து அப்பெருமானின் கருணையை நினைந்து யாதினை நினைந்து என்சொல்லிப் பாடுகேன் எனத் திகைக்க முருகப்பெருமான் தம் திருக்தோளினின்றும் ஒரு பூவினை வீழ்த்தியருளி அதனையே முதன் மொழியாகக் கொண்டு பாடுக எனக் குறிப்பால் உணர்த்த அக்குறிப்பின் வழிப் பூ என்னும் சொல்லை முன் வைத்துப் பாடினர் என்ப. பூ என்பது மங்கலச் சொல் ஆதலும் ஈண்டுக் கருதத்தக்கது.

நான்முகன் செந்தாமரையிலும் வீற்றிருப்பன்; வெண்டாமரையிலும் வீற்றிருப்பன் என அறிஞர் கூறுவர். 'புறத்தும் ஆயிரம் வெள் இதழால் ஒரு புண்டரீகமும் அண்ணலும் போலவே' [தக்க- 282], 'செந்தாமரையோனை' [தக்க-698] என வரும் ஒட்டக்கூத்தர் வாக்கால் இதனை அறியலாம்.

பா- யாப்பமைதி. தேம் மேவு எனப் பிரித்து இனிமை பொருந்திய எனப் பொருள் கோடலும் ஒன்று. ஆதிநடு அந்தம் கடந்த - முதல் இடை கடை மூன்றும் கடந்த எனப் பொருள் கோடலும் ஒன்று. நித்தியம்- அழிவில்லாதது [சத்து].

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

ஆனந்தம்– இன்பம். போதம்–அறிவு: ஈண்டு மெய்யறிவைக் குறிக்கும் [சித்து]. சச்சிதானந்தம் என்று அழைப்பதும் இதுவாகும். சத்து– என்றும் உள்ளது. சித்து– அறிவுடையது.

பந்தம்–கட்டு; தளை. பந்தந்தணந்த பரஞ்சுடர் என்றது வினையின் நீங்கி விளங்கிய அறிவினன் என்பதை உணர்த்துவதாகும்.

வந்த குறி– வழங்கப்படுவதொரு பெயர். உயிர் தன் அறிவின் எல்லைக்குட்பட்ட பொருள்களுக்குப் பெயரிட்டு வழங்குதல்போல இறைவனுக்கு ஒரு பெயரிட்டு வழங்குதற்கு இல்லை. செஞ்சடையப்பர், வைத்தியநாதர், நடராசர் முதலியனவாக நாம் பெயரிட்டு அழைப்பதெல்லாம் ஒரு பெயருமில்லா இறைவனுக்கு நாம் ஏற்றி உரைக்கும் [உபசாரமாக வழங்கும்] திருப்பெயர்களே ஆம். குணம் என்பது ஈண்டுத் தாமதம், இராட்சசம், சாத்வீகம் ஆகிய குணங்களையேயாம். உயிர்களுக்கு இம்முக்குணங்களும் அவ்வச் சூழல்களுக்கு ஏற்ப மாறிமாறி வரும். இறைவனுக்கு இவை இல்லை. ஆனால் அவனுக்குரிய சிறப்பான குணங்கள் எட்டு உள. அவை தன்வயத்தனாதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என்பனவாம். எனவே வினைவயத்தால் மாறி மாறி உடலெடுக்கும் உயிர்களுக்குரிய முக்குணங்கள் இறைவனுக்கு இல்லை என்பதும், அவனுக்கே உரிய சிறப்பான குணங்கள் எட்டு உள என்பதும், அதுபற்றியே திருவள்ளுவர் முதலானோர் எண்குணத்தான் என இறைவனைக் குறித்தனர் என்பதும் ஈண்டு அறியத் தக்கதாம்.

கோலம்–வடிவு, இறைவனுக்கென ஒரு தனித்த வடிவு இல்லை. உயிர்களின் பக்குவத்திற்கேற்ப அவற்றை ஆட்கொள்வதற்கென இறைவன் கொள்ளும் வடிவங்களையே நாம் இன்று வடிவங்களாகக் கொண்டு வழிபடுகின்றோம். இதுபற்றியே "ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

கொட்டாமோ'' என மணிவாசகரும் அருளினர். இறைவன் உயிர்க்கு அறிவும் உணர்வும் கொடுத்தபின்பே அவை இறைவனைப்பற்றி எண்ணவும், அவன் பொருள் சேர்புகழைச் சொல்லவும் முற்படுகின்றன. ஆதலின் உயிர் அறிதற்கும், உணர்தற்கும் முதல்வனாகவும், முற்பட்டவனாகவும் இறைவன் இருத்தலின் 'அறிவுக்கு அனாதியாய்' என்றார். ஐந்தொழில்களாவன. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. உயிர்கள் செய்யும் வினைக்கேற்ப இறைவன் நுண்ணுடலையும், பருவுடலையும் தருதல் படைப்பாம். அவ்வுடலைக் கொண்டு உயிர் உணரவும் நுகரவும் வாழுமாறு செய்தல் காத்தலாம். அவ்வாறு உணர்ந்தும் நுகர்ந்தும் வாழ்ந்த உயிர்களை இளைப்பாறுமாறு செய்தல் அழித்தலாம். உயிர், தன் வினைகளை நுகருங்கால் அவற்றிற்கேற்ப உள்ளனவற்றை மட்டும் நினைவிற்கொள்ளச் செய்து ஏனையவற்றை மறக்கச்செய்வது மறைப்பாம். மருத்துவர் அறுவை சிகிச்சை செய்யுங்கால் மயக்கமருந்து ஊட்டுவது போல்வது இது. உயிர் இவ்வாறெல்லாம் வினைப்பயனை நுகர்ந்தபின் இருவினையும் ஒப்பும், மலநீக்கமும் ஏற்படும். அந்நிலையில் வீடுபேற்றை அருளி அதற்கு வாழ்வளிப்பது அருளலாம். இவ்வைந்தொழில்களையும் இறைவன் தன் அருளாற்றலைக் கொண்டு நினைவுமாத்திரத்தால் செய்வதல்லது, நம்போன்று உழன்று செய்வதில்லை. ஆதலின் 'ஐந்தொழிற்கும் அப்புறமாய்' என்றார்.

அழிப்பு இளைப் பாற்றல் ஆக்கம் அவ்வவர் கன்மம் எல்லாம்
கழித்திடல் நுகரச் செய்தல் காப்பது கன்ம ஒப்பில்
தெழித்திடல் மலங்கள் எல்லாம் மறைப்புஅருள் செய்தி தானும்
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடின் அருளே எல்லாம்.

–சித்தியார்–சுபக்கம் 37

எனவரும் பாடல் இறைவனின் ஐந்தொழில் பயனைவிளக்கும். அன்றே–காலப்பழமை உணர நின்ற சொல். அன்று+ ஏ எனப் பிரித்து இரண்டும் அசைநிலை எனக் கொள்வாரும் உளர்.

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

மனாதி-மனம் மொழி மெய் ஆகியன. இம்முக்கருவிகளின் அளவில் இறைவன் புகழ் அமைந்து விடுவதில்லை. அவற்றிற்கும் மேலானது என்பார் 'மனாதிகளுக்கு எட்டாவடிவாய்' என்றார். 'மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே! எனமணிவாசகரும் கூறுவர். இத்தொடர்க்கு மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கு கருவிகளுக்கும் எட்டாதவன் எனப் பொருள் கோடலும் ஒன்று.

தன்+ஆது=தனாது. தனாது- தன்னுடையது. ஆது என்பது ஆறனுருபு. பஞ்சவித ரூபம்-ஐவகை வடிவு; நான்முகன் திருமால் உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்ற ஐவரும் இறைவன் அருள்வழி நின்று படைத்தல் முதலாய ஐந்தொழில்களைச் செய்பவராவர். ஆதலின் அவ்வைவகை வடிவினரும் இறைவனின் வடிவினரே எனக் குறித்தார். இவ்வைவரும் இவ்வைவகைத் தொழில்களையும் செய்வது உயிர்களை ஈடேற்றி வாழ்விக்கவே ஆம். ஆதலின் இவ்வைவகை வடிவும் பேரின்ப வடிவு எனக் குறித்தனர். இத்தொடர்க்கு இவ்வாறன்றி 'சிவம் சத்தி சாதாக்கியம் ஈசுவரம், சுத்தவித்தை என்னும் சிவதத்துவ புவனங்களில் வைகும் நுகர்வை அளிப்பதாய்' எனப் பொருள் கூறலும் ஒன்று.

தஞ்சம்-பற்றுக்கோடு. தனிப்பொருள்- ஒப்பற்ற பொருள். எஞ்சாத-குறையாத, பூரணமாய்-நிறைவாய். எனவே குறைவிலா நிறைவானவன் என்பது பொருளாம். கதி-பேறு, உயிர்கள் அனைத்தும் பிறப்பு இறப்புப் பிணி மூப்பு முதலிய தீங்கில் பட்டு உழலுதற்குக் காரணம் அவை செய்த வினையேயாம். இறைவன் இயல்பாகவே வினையின் நீங்கியவனாதலின் பிறப்பு இறப்பு முதலிய எத்தீங்கும் அவனுக்கு இல்லை என்பார். 'போக்கும்.... காரணமும் இல்லாக் கதியாகி' என்றார். இது அவனுக்கு வாய்த்த தனிப்பேறு ஆகும்.

கதி-எல்லாப் பொருள்களும் புக்கு ஒடுங்குமிடம். அதாவது வீடு பேறு எனப் பொருள் கோடலும் ஒன்று. புக்கொடுங்குமிடத்தைப் [வீடு பேற்றை] புக்கில் எனத் திருவள்ளுவர் கூறுவர். 'வீடு பேறாய் நின்ற விண்ணோர் மூர்த்தி' என்னும் திருவாசகம்.

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

இந்திரசாலம் என்பது இல்லாததை உள்ளதாகவும், உள்ளதை இல்லாததாகவும் காட்டும் ஒரு வித்தையாகும். இவ்வாறு காட்டுபவன் மற்றவர்களை இவ்வித்தையில் மயங்கச் செய்வானேயன்றித் தான் அதில் ஒன்றி மயங்குவன் அல்லன். ஆயினும் காண்போருக்கு அவனும் அவ்வித்தையில் ஒன்றி நிற்பதுபோலத் தோன்றும். இதைப் போன்றே இறைவனும் எல்லாப் பொருள்களையும் காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடினும் தான் அவற்றில் ஒன்றாது விளங்குவன். இதுவே அவன் சாராது சார்ந்து நிற்கும் நிலையாம். சாராத சார்பு– உண்மையில் தான் சார்ந்து நிற்பது அன்றிக் காண்போர்க்குச் சார்ந்து நிற்பதுபோலத் தோன்றுதல்.

முந்தும் கரு– முற்பட்ட மூலம். உயிர்கள் உடல் கருவி ஆகியவற்றைப் பெறுதற்கு முட்டை, வியர்வை, கரு, வித்து என்பனவாய மூலப்பொருள்கள் உள. இறைவனுக்கு அவ்வாறு இல்லை. ஆனால் பிற பொருள்கள் தோன்றுதற்கெல்லாம் அவனே மூலகாரணமாகின்றான். இதனைத் 'தாயும் இலி தந்தையிலித் தான் தனியன் காணேடி' எனவரும் திருவாசகத்தானும் 'மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும் மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம்மூர்த்தியன்றோ' எனவரும் கந்தபுராணத்தாலும் நன்கறியலாம். ஆதலின் 'கருவின்றி நின்ற கரு' என்றார். அன்னன் ஆயினும் உயிர்களை ஆட்கொள்வதற்கு எனக்கொள்ளும் அருளுருவங்கள் உள என்பார். 'அருளே உருவின்றி நின்ற உருவாய்' என்றார்.

திரிகரணம்– மூவகைக் கருவிகள். அவை மனம், மொழி, மெய் என்பன. இவற்றைக் கொண்டே உயிர்கள் செயற்படுகின்றன. இதைப்போன்றே இறைவனும் விருப்பாற்றல் [இச்சாசக்தி], அறிவாற்றல் [ஞானசக்தி], தொழிலாற்றல் [கிரியா சக்தி] ஆகிய மூவகை ஆற்றல்களால் உயிர்களை ஒடுக்கியும், காத்தும், படைத்தும் வருகின்றான். இலயம்– ஒன்றுதல். அதாவது காப்பது அதிகாரம்– தொழில் புரியச் செய்வது. அதாவது படைத்தல்.

இறைவன் ஒருவனே ஆவன். அவனே உயிர்களை உய்யக் கொள்ளுதற்காக மூவகைத் திருமேனிகளையும் கொள்கிறான். நான்முகன், திருமால், உருத்திரன், [illegible]சன் எனக் கொள்ளும் உருவங்களெல்லாம் அவனது [illegible]ருவத்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

திருமேனிகளாகும். சிவம், சக்தி, விந்து, நாதம் என்பன அவனுடைய அருவத்திருமேனிகளாகும். சதாசிவம் என்பது அவனுடைய அருவுருவத் திருமேனி ஆகும். இவ்வொன்பான் வடிவங்களையும் இறைவன் ஒருவனே கொண்டு நின்று உயிர்களை உய்விக்கிறான்.

சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவம் திகழும் ஈசன்
உவந்தருள் உருத்திரன்தான் மால் அயன் ஒன்றின் ஒன்றாய்ப்
பவந்தரும் அருவம் நான்கு இங்கு உருவம் நான்கு உபயம்
ஒன்றாம்
நலம்தரு பேதமாக நாடகம் நடிப்பன நாதன்.

எனவரும் சிவஞான சித்தியாரும் இதனை விளக்கும். அருவத்திருமேனிகளால் ஒடுக்கத்தையும், அருவுருவத்திருமேனியால் காத்தலையும் உருவத் திருமேனியால் படைப்பு முதலிய செயல்களையும் செய்வன் உயிர்களின் தகுதிக்கேற்ப இறைவன் ஆட்கொள்ள வரும் வடிவங்கள் பல என்பார். 'பருவ வடிவம் பலவாய்' என்றார். அவை போக வடிவம் யோகவடிவம் கோரவடிவம் என்பன. உயிர்கள் இன்பம் அடைதற்கெனக் கொள்ளும் வடிவம் போகவடிவாம். உயிர்கள் செய்த தீமைக்கு ஏற்ப அவற்றை ஒறுத்தற்குக் கொள்ளும் வடிவம் கோரவடிவாம். உயிர்கள் மெய்யுணர்வு பெற்று வீடுபேறு அடைதற்காகக் கொள்ளும் வடிவம் யோகவடிவாம். இதனைப்

போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியா யோக முத்தி உதவுதல் அதுவும் ஓரார்
வேகி ஆனால் போல் செய்த வினையினை வீட்டல ஓரார்
ஊகியா மூடர் எல்லாம் உம்பரின் ஒருவன் என்பார்.
–சுபக்கம் –50

எனவரும் சித்தியார் பாடலும் விளக்கும். மணிவாசகரும்

வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையும்
நூறு நூறாயிரம் இயல்பினதாகி
ஏறுடை ஈசன் இப்புவனியை உய்யக்
கூறுடை மங்கையும் தானும் வந்து அருளி

எனக் கூறுமாறு காண்க.

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

உயிர்கட்கு வினைமாசு நீங்கப் பிறவி கொடுத்தருளல்
– இருள்மலத்துள்

12. மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தி அளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்துத் –தேகம் உறத்

13. தந்த அருஉருவஞ் சார்ந்துவிந்து மோகினிமான்
பெந்தம் உறவே பிணிப்பித்து– மந்த்ரமுதல்

14.ஆறத்து வாவு[து]அண்டத்[து]ஆர்ந்த அத்துவாக்களும் முற்
கூறத் தகும்சிமிழ்ப்பிற் கூட்டுவித்து – மாறிவரும்

15. ஈரிரண்டு தோற்றத்[து] எழுபிறப்புள் யோனி
ஆரவந்த நான்குநூ றாயிரத்துள் – தீர்வரிய [எண்பான்

16. கன்மத்துக்[கு] ஈடாய்க் கறங்கும் சகடமும் போல்
சென்மித்[து] உழலத் திரோதித்து – வெந்நிரய

17. சொர்க்காதி போகமெலாம் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்காரணம் சிறிது நண்ணுதலும்''

பொழிப்புரை:

அறியாமையை விளைவிக்கும் ஆணவ மலத்துள் மயங்கும் அளவிறந்த உயிர்கட்கு வீடுபேறு வழங்குதற் பொருட்டு, அவ்வாணவ மலம் நீங்குதற்குரிய பக்குவமடைய அருள்நோக்கம் செய்தருளி, அவ்வுயிர்கள் உடல் எடுக்குமாறு உதவிய சதாசிவத் திருவுருவைச் சார்ந்து இருக்கும் சுத்த அசுத்த பிரகிருதி மாயைகளின் வாயிலாக அவ்வந் நிலைக்குத் தக்க கட்டு உறுமாறு இறுகக் கட்டுவித்து, மந்திரம் முதலிய ஆறு வழிகளுடனும் உலகில் நிறைந்த பிற வழிகளுடனும் முற்கூறிய பிணிப்பில் அழுத்திக் கூட்டுறவு கொள்ளுமாறு செய்வித்து, மாறி மாறி வருகின்ற நால்வகைத் தோற்றத்தினையுடைய எழுவகைப் பிறப்பினுள் எண்பத்து நான்கு இலக்கம் பிறப்பு வேறுபாடுகளுள் திருவருள் துணையாலன்றி நீக்கற்கியலாத இருவினைக்கு ஈடாகக் காற்றாடியும் வண்டியின் உருளையும் போலப் பிறந்து [illegible] வருந்துமாறு மறைப்பைச் செய்து, அவற்றால் கொடி[illegible]த் துன்பங்களையும் சுவர்க்க இன்பங்களையும் நுகருமாறு [illegible]து,

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

இவ்வகையில் பக்குவம் பெற்ற திறத்தால் வீடுபேறு அடைதற்கு ஏதுவாய சிவபுண்ணியம் சிறிது விளைதலும் [எ-று].

விளக்கவுரை:

இருள்மலம்- ஆணவமலம். உயிர்க்கு அறியாமையை விளைவித்து அதன்வாழ்வை இருள்சூழச்செய்தலின் அதனை இருள்மலம் என்றார். இருள்பிற பொருளைக் காட்டாதாயினும் தன்னையேனும் காட்டும். இது பிற பொருளைக் காட்டாது, தன்னையும் காட்டாது. " ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும், இருபொருளும் காட்டாதிது" எனத் திருவருட் பயன் இதன் இயல்பைக் கூறும். நெல்லில் உமியும் நிகழ் செம்பினில் களிம்பும் அவற்றினிடத்துத் தொன்மையாகவே உள்ளனபோல, இம்மலமும் தொன்மையாகவே உயிரொடு இயைந்து நிற்பதாகும். இதனோடு உயிர் கூடியிருப்பதாலேயே அறியாமையோடுகூட விளங்குகின்றது. இம்மல நீக்கம் பெற்று சிவப்பேறு அடையவே இறைவன் கருணை கூர்கின்றான். மலபாகம் உறுதலாவது ஆணவமலம் தன்வலியிழந்து நிற்பதாகும். யான் எனது என்னும் செருக்கு நீங்கித் திருவருள் வழி நடக்கும் பக்குவமே மலபரி பாகமாகும். இதனைத் திருவருள் துணைக் கொண்டே உயிர் பெற இயலும். அருவுருவம்- சதாசிவம். இதனைச் சார்ந்து இருப்பது சுத்தமாயை ஆகும். அதனைச் சார்ந்து அசுத்தமாயையும், அதனைச் சார்ந்து பிரகிருதிமாயையும் உள்ளன. விந்து- சுத்தமாயை. இது அழிவில்லாதது. அருவாயது. மயக்கம் செய்யாதது. மோகினி- அசுத்த மாயை. இதுவும் அழிவில்லாதது. அருவாயது. வினைக்குப் பற்றுக் கோடாயது. மயக்கம் செய்வது. மான்- பிருகிருதிமாயை. இது அறியாமை [அவிச்சை], முனைப்பு [ஆங்காரம்] , அவா, ஆசை,வெகுளி ஆகிய ஐவகைக் குற்றங்களும் விளைதற்குக் காரணமாய் இருப்பது. பெந்தம்உற- பிணிப்பைப் பெற. அத்துவா- வழி. உயிர்கள் மலநீக்கம் பெற்றுச் சிவப்பேற்றை அடைதற்கு இவ் ஆறு வழிகளையும் கடத்தல் வேண்டும். அவ்வழி மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என ஆறு வகைப்படும். மந்திரம்- தொடராயிருப்பது. பதம்- சொல்லாயிருப்பது. வன்னம்- எழுத்தாயிருப்பது. இம்மூன்றும் சொல்வடிவாயது.

blic domain. Digitization Muthulakshmi Research Aca

புவனம்– உலகு. தத்துவம்–உயிர் வினை நீக்கம் பெறும் வழிகளைப் படிப்படியாகப் பெறவைப்பது. இம்மூன்றும் பொருள் வடிவாயது. 'ஆறு அத்துவாவும் அண்டத்து ஆர்ந்த அத்துவாவும்' என விதந்து கூறுதலின் முன்னையது பிண்டத்தில் [உடம்பில்] உள்ளதெனவும், பின்னையது அண்டத்தில்[உலகில்] உள்ளதெனவும் வேறுபாடு அறியப்பெறும். இவற்றின் நுண்மைகளை உணர்ந்து அவற்றினின்று நீங்குதல் வேண்டும். சிமிழ்ப்பு– கட்டு.

ஈரிரண்டு தோற்றம்– நால்வகைப் பிறப்பு. ஒன்று முட்டையிலிருந்து தோன்றுவன. இரண்டு கருப்பையில் இருந்து தோன்றுவன. மூன்று வியர்வையில் இருந்து தோன்றுவன. நான்கு கிழங்கு வித்து முதலியவற்றினின்றும் தோன்றுவன. ஏழ்பிறப்பு– தேவர், மக்கள், விலங்கு,பறவை,ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. யோனி பேதம்– கருவின்[பிறப்பு] வேறுபாடுகள். தேவரில் பதினான்கு இலக்கமும், பறவையில் பத்து இலக்கமும், ஊர்வனவற்றுள் பதினொரு இலக்கமும், நீர் வாழ்வனவற்றுள் பத்து இலக்கமும், தாவரங்களில் இருபது இலக்கமும் ஆக எண்பத்துநான்கு இலக்கப் பிறப்பு வேறுபாடுகள் உள. ''உரைசேரும் எண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனி பேதம்'' எனத் திருஞானசம்பந்தரும் இதனைத் தொகுத்துக் கூறுவர். காற்றாடியும் வண்டியின் உருளையும் [சக்கரமும்] உயிர் வினை வயத்தால் மாறி மாறிப் பிறத்தற்கு உவமைகளாம்.

நற்காரணம்– சிவபுண்ணியம்

நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளல்.
–தர்க்கமிடும்

18. தொன்னூல் பரசமயம் தோறும் அதுவதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து – முன்னூல்

19. விரதமுத லாயபல மெய்த்தவத்தின் உண்மைச்
சரியைகிரி யாயோகம் சார்வித்[து] – அருள்பெருகு

20. சாலோக சாமீப சாருப மும்புசிப்பித்[து]
ஆலோகம் தன்னை அகற்றுவித்து – நால்வகையாம்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

21. சத்திநி பாதம் தருதற்[கு] இருவினையும்
ஓத்துவரும் காலம் உளவாகிப் – பெத்த

22. மலபரி பாகம் வருமளவில் பன்னாள்
அலமருதல் கண்ணுற்[று] அருளி

பொழிப்புரை:

தத்தம் மதங்களே சிறந்ததென நிலைநாட்டும் பழமையான நூல்களையுடைய பிற சமயங்களில் எல்லாம், அவ்வச் சமய நூல்களே மெய்நூல் என்றறிந்து அவற்றில் தோயுமாறு செய்து, அதன்பின் வேதங்களில் கூறியுள்ள பலவேறு விரதங்கள் ஆச்சிரமங்கள் முதலியவற்றையும் கடைப்பிடிக்கச் செய்து, அதன்பின் மெய்மையாகச் செய்த தவத்தின் பயனாக நிலைத்த பயனைச் செய்யும் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றினும் படிப்படியாகச் சேர்ப்பித்து அவற்றின் வாயிலாகத் திருவருள் பெறுவதற்கு ஏதுவாகிய சாலோகம், சாமீபம், சாரூபம் என்னும் மூவகைப் பத முத்திகளையும் நுகரச் செய்து, அதனால் தெளிந்த அறிவை மேலும் விரிவடையச் செய்து, நால்வகையான அருட்பதிவை வழங்குவதற்கு நல்வினை தீவினை என்னும் இருவினைகளையும் ஒப்பக்கருதும் காலம் உண்டாகி இதுகாறும் உயிரைக் கட்டுப்படுத்தியிருந்த ஆணவ மலம் தன்வலிமை கெட்டு ஒழிதற்குரிய பக்குவநிலை வரும் வரை இவ்வாறு உயிர்கள் பன்னெடுங்காலமாகப் பிறந்திறந்து வருந்துதலை அருட்கண்ணால் நோக்கி [எ–று].

விளக்கவுரை:

இந்திய நாட்டிலுள்ள சமயங்களைப் புறப்புறச் சமயம், புறச்சமயம், அகப்புறச் சமயம், அகச்சமயம் என நால்வகைப்படுத்தியுள்ளனர். வேதம், சிவாகமம் ஆகிய இரண்டையும் ஒப்புக் கொள்ளாதாரைப் புறப்புறச் சமயத்தவர் என்றும், வேதத்தில் தமக்குரிய பகுதியை மட்டும் எடுத்துக்கொண்டு பிறபகுதியை இகழ்வாரைப் புறச்சமயத்தவர் என்றும், வேதசிவாகமங்களோடு அவற்றிற்குப் புறம்பாக உள்ள நூல்களையும் ஏற்றுக் கொள்வோரை அகப்புறச் சமயத்தவர் என்றும், சைவ சித்தாந்திகளோடு முழுமையாக ஒத்து அவர்கள் கூறும் பொருள்களில் மட்டும் ஓரளவு கருத்து வேற்றுமை

blic domain. Digitization Muthulakshmi Research Aca

உடையாரை அகச்சமயத்தவர் என்றும் சித்தாந்த வல்லுநர்கள் பாகுபடுத்தியுள்ளனர்.

புறப்புறச் சமயமாவன:- உலகாயதம், மாத்யமிகம், யோகசாரம், சௌத்திராந்திகம், வைபாடிகம், ஆருகதம் என்பன.

புறச்சமயமாவன:- தருக்கம், மீமாஞ்சகம், ஏகான்ம வாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என்பன.

அகப்புறச்சமயமாவன:- பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சிவசங்கிராந்த வாதம், ஈசுவர அவிசார வாதம், சிவாத்துவித சைவம் என்பன.

இவை ஒவ்வொன்றும் தத்தம் சமயங்களே உயர்ந்தது என நிலைநாட்டும். அவற்றைக் கூறும் நூல்களை உணர்ந்து திருவருள் சார்பால் அவற்றினின்றும் விலகுதலும் வேண்டும். இதனைப்,

புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகல்மிருதி வழிஉழன்றும் புகலும் ஆச்சிரம

அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்

சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்

திறத்து அடைவர் இதில்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்.

– சுபக்கம் 11

என்னும் சிவஞானசித்தியாரும், நாவரசரும் பிறசமய நெறியில் சின்னாள் நின்றமைக்குக் காரணம், ''நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையே'' என்பது அவர் வரலாற்றால் அறியப்படும். எனவே தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாய பின்பும், இத்தகைய நெறிகள் பலவும் அலைப்புண்ணுமாறு செய்யும் என்பதும், அவற்றினின்றும் நீங்கி உய்யவும் திருவருள் துணை வேண்டும் என்பதும் பெறுதும்.

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும் அன்றிச் சுருக்கியேனும் மனம் மொழி மெய்களால் இறைவழிபாடு ஆற்றுவதாகும். தவமாவது கோடைக்கண் வெயில் நெருப்பு ஆகியவற்றில் நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களைமேற்கொண்டு அவற்றால் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துப் பிற உயிர்களை ஓம்புதலாகும்.

ஆச்சிரமங்கள்– நிலை வேறுபாடுகள்.வடநூலார் பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நால்வகையாகக் கூறுவர். தமிழ்நூலார் இல்லறம், துறவறம் என இரு வகையாகக்கூறுவர். 'நல்லற நூல்களிற் சொல்லறம் பல சில, இல்லறம், துறவறம் எனச் சிறந்தனவே' என நம் குமரகுருபர அடிகளும் தமிழ் நூலார் கொள்கையை ஏற்றுக் கூறுதல் காண்க.

வேள்வி முதலிய தவம் எல்லாம் இடைக்காலப் பயனைத்தருவனவே. நிலைத்த இன்பத்தைப் பயப்பனஅல்ல. அன்றியும் அவை பயன்கருதிச் செய்வன. ஆதலின் பின்னும் பிறப்பிற்கு ஏதுவாகவும்அமையும். ஞானநூல்களும் இத்தகைய வேள்விகளைப் பசித்துண்டு பின்னும் பசிப்பானையொக்கும் என்னும் ஆதலின் அதனை விலக்கவே, "மெய்த்தவத்தின்" என்றார். மெய்த்தவமாவது நிலைபேறான இன்பத்தைப் பெறுதற்கு வாயிலாக அமையும் சரியை கிரியை யோகம் என்பனவாம். இவற்றைச் செய்யவே உயிர் ஞானம் பெற்று வீடுபேறு அடையும் என்பதாம்.

சரியையாவது நந்தவனம் அமைத்தல், பூக்கொய்தல், மாலைகட்டல், அருள்நூல்களை ஓதல் உரைத்தல் கேட்டல் திருக்கோவிலை அடைதல், மெழுகிடல், விளக்கேற்றல், அடியார்க்குத் தொண்டு செய்தல் முதலிய புறத்தொழில் மாத்திரமாகச் செய்வனவாம். இதனை அடிமைநெறி [தாதமார்க்கம்] என்பர்.

கிரியையாவது உடலைத்தூய்மைப்படுத்திக்கொண்டு இறைவனை உள்முகமாக உணர்ந்து அவ்விறைவருக்குத் திருமுழுக்காட்டல், நறுமணப் பொருளை ஊட்டல்,

blic domain. Digitization Muthulakshmi Research Aca

விளக்கிடல், மலர் சூட்டல் முதலியவற்றைச் செய்து வழிபடுவதாம். இதனை மகவுநெறி [புத்திர மார்க்கம்] என்பர்.

யோக நெறியாவது இறைவனை அகத்தே மட்டும் வழிபடுதலாகும். இது எண்வகை உறுப்புக்களை உடையது. இதனை அட்டாங்க யோகம் என்பர். 1. இமயம்:- பொய்யுரையாமை, பிறர்க்குத் தீங்கிழையாமை, பிறர் பொருள் விழையாமை, பெண்வழிச் சேராமை முதலிய நற்குணங்களைக்கொண்டு ஒழுதுவதாகும். 2. நியமம்:- வெகுளாமை, பொறுமை, இரக்கம், மனநிறைவு, வழிபாடு, குருமொழி, அடியவர் மொழிகளை அன்போடு கேட்டல் ஆகியவற்றை நாளும் மேற்கொண்டு ஒழுகுவதாகும். 3. ஆசனம்:- மான்தோல், புலித்தோல், யாமை வடிவான பலகை முதலிய நல்லிருக்கைகளுள் ஒன்றன் மீதிருந்து மனத்தை ஒருவழிப்படுத்துவதாகும். 5. பிராணாயாமம்:- உயிர்க்காற்றை இடது மூக்கின் வழிப் பதினாறு மாத்திரை உள்வாங்கி அறுபத்துநான்கு மாத்திரை அளவு உள்நிறுத்திப் பின் வலது மூக்கின் வழி முப்பத்திரண்டு மாத்திரை வெளியில்விட்டு மீண்டும் அவ்வுயிர்க்காற்றை வலது மூக்கின் வழி அவ்வாறே வாங்கி உள்நிறுத்தி இடது மூக்கின் வழி அவ்வாறே விடுவதாகும். திருவருள் உணர்வோடு இதனைச் செய்யின் சகர்ப்பம் என்பர். அஃதின்றிச் செய்யின் அகர்ப்பம் என்பர். 6. பிரத்தியாகாரம்:- உரன் என்னும் தோட்டியால் ஓரைந்தும் காப்பதாகும். 7. தாரணை:- இறைவன் திருவடிகளை உள்ளத்தில் நிலைபெறுத்துவதாகும்.8. தியானம்:- அவ்வாறு நிலைபெறுத்திய திருவடிகளை இடையறாது எண்ணுதலாகும். 9. சமாதி:- உலகியல் உணர்வின்றித் திருவருள் உணர்விலேயே திளைத்து நிற்பதாகும். இவ்யோக நெறியைத் தோழமை நெறி [சகமார்க்கம்] என்பர்.

சரியை முதலிய நெறிகளில் நின்றதன் பயனாகச் சாலோக சாமீப, சாரூபம் என்னும் பேறு கிடைக்கும். சாலோகமாவது இறைவன் இருக்குமிடத்திலிருந்து ஒருவர் மனையில்பணிசெய்யும்அகத்தொண்டர்க்குள்ளஉரிமைபோல எங்கும் தடை இன்றிச் செல்லவும், அங்குள்ள பொருள் இன்பங்களைத் துய்க்கவும் பெறும் நிலையாகும். சாமீபமாவது

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

ஒரு வீட்டில் மைந்தர்க்கு இருக்கும் உரிமைபோல இறைவனுக்கு அணுக இருந்து அங்குள்ள பொருள் இன்பங்களைத் துய்த்து வாழ்வதாகும்.

சாரூபமாவது ஒருவரோடு நெருங்கிப் பழகும் தோழர்கட்கு இருக்கும் உரிமைபோல இறைவனின் திருவுருவத்தைப் பெற்று அங்குள்ள பொருள் இன்பங்களைத் துய்த்து வாழ்வதாகும். இம்மூவகைத் [சரியை, கிரியை, யோகம்] தவத்தையும் செய்து அவற்றின் வழி இப்பேறுகளையும் துய்த்ததன் வாயிலாக ஞானம் கிட்டும். ஞானமாவது இறைவனே குருவாக எழுந்தருளி அருளுரை வழங்கி ஆட்கொள்வதாகும். இதன் பயன் சாயுச்சியம் என்ப. சாயுச்சியமாவது இறைவன் திருவடியில் கலந்து இன்புறுவதாகும்.

ஆலோகம்– தெளிந்த அறிவு. இதனை அலோகம் என்பதன் திரிபாகக்கொண்டு அறியாமையை அகற்றி எனப் பொருள் கோடலும் ஒன்று. அலோகம்– அறியாமை. அகற்றுவித்து– விரிவடையச்செய்து; இது முன்னைய பொருளுக்கு ஆம். அகற்றுவித்து– நீக்குவித்து; இது பின்னைய பொருளுக்கு ஆம்.

சத்திநிபாதம்– அருள்பதிவு. [சத்தி– அருள்; நிபாதம்– பதிவு] இவ்வருள் பதிவு உயிர்களின் வேட்கைக்கும் தகுதிக்கும் ஏற்ப அமைந்து பயன் விளைவிக்கும். அது நான்கு வகைப்படும். இவற்றுள் வாழைத் தண்டில் தீப்பற்றுதல் போன்றது மந்ததரம் என்றும், ஈரவிறகில் தீப்பற்றுதல் போன்றது மந்தம் என்றும் உலர்ந்த விறகில் தீப்பற்றுதல் போன்றது தீவிரம் என்றும் கற்பூரத்தில் தீப்பற்றுதல் போன்றது தீவிரதரம் என்றும் கூறுவர்.

இருவினை ஒப்பாவது நன்மை வருங்கால் அதனை மகிழ்ந்து ஏற்பதோ, தீமை வருங்கால் அதற்கு வருந்தி வெறுப்பதோ இன்றி இரண்டையும் ஒன்றாகக் கருதி ஏற்பதாகும். 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' எனக் கருதி வாழும் நிலை இதுவாகும்.

blic domain. Digitization Muthulakshmi Research Aca

'நன்றாங்கால் நல்லவாக் காண்பவன் அன்றாங்கால்
அல்லல் படுவது எவன்'

'இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்'

எனத் திருவள்ளுவர் கூறுவன எல்லாம் அவ்விருவினை ஒப்பிற்குரிய வழிகளேயாம்.

பெத்தமலம்– உயிரினைக் கட்டுப்படுத்தி நிற்கும் ஆணவ மலம். உயிர்கட்கு அறியாமையைச் செய்து அதனால் வரும் துன்பங்கட்கு எல்லாம் காரணமாய் இருப்பது அவ்வாணவ மலமே.

'இருளின்றேல் துன்(பு)ஏன் உயிரியல்பேல் போக்கும்
பொருளுண்டேல் ஒன்றாகப் போம்.'

என உமாபதி சிவாசாரியார் அருளுவது கொண்டு இவ்வாணவத்தால் ஆய அல்லலை அறியலாம். பரிபாகம்– ஆணவமலம் தன்நிலை கெட்டு வறுத்தவித்தென இருக்கும் நிலை.

உயிர்களுள் மும்மலமுடையார்க்கு (சகலர்க்கு) அருளும் திறன்

–உலவாது

23. அறிவுக்[கு] அறிவாகி அவ்வறிவுக்கு எட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப் – பிறியாக்

24. கருணைத் திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரன் என்[று] ஓர்திருப்பேர் கொண்டு – திருநோக்கால்

25. ஊழ்வினையைப் போக்கி உடல் அறுபத் தெட்டுநிலம்
ஏழு[ம்] அத்து வாக்கள் இருமூன்றும் – பாழாக

26. ஆணவமான படலம் கிழித்[து] அறிவில்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப் – பூணும்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

27. அடிஞானத் தால் பொருளும் ஆன்மாவும் காட்டிக்
கடியார் புவனமுற்றும் காட்டி – முடியாது

28. தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகிஎங்கும்
நீக்கம்அற நின்ற நிலைகாட்டிப் – போக்கும்

29. வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவும் கடந்[து] உலவா இன்பம் – மருவுவித்து

பொழிப்புரை:

இடையறாது உயிரின் அறிவிற்கு அறிவிக்கும் அறிவாகி, அவ்வுயிர் அறிவிற்கும் அகப்படாத நிலையில் எங்கும் நிறைந்த நிலையினின்றும் நீங்கித் தன்னை விட்டு எஞ்ஞான்றும் நீங்குதலின்றி நிற்கும் அருளையே திருமேனியாகக் கொண்டு, இந்நிலவுலகில் வெளிப்பட்டுக் குருமூர்த்தி என்னும் ஒப்பற்ற திருப்பெயரைப் பூண்டு, திருக்கண் பார்வையால் பழவினையை ஒழித்து, உடற் கருவிகள் அறுபத்தெட்டும், மூலாதாரம் முதலாக உள்ள ஏழு நிலங்களும், மந்திரம் முதலாக உள்ள ஆறு அத்துவாக்களும் அடியோடு மறைய ஆணவத்திரையை நீக்கி, உயிரின் அறிவால் காண இயலாத அருள்ஞான ஒளியை வழங்கி, இறைவனின் திருவடிகளை அறிய மேற்கொள்ளும் அருள் அறிவால் தன்னையும் உயிரையும் உள்ளவாறு காணுமாறு செய்து, காப்பமைந்த உலகனைத்தையும் அறியுமாறு செய்து, எக்காலத்தும் அழியாததும் எங்கும் நிறைந்ததுமான பேரின்பம் தரும் தெளிந்த அமுதாய், எவ்விடத்தும் நீக்ககமற நிற்கும் நிலைபேற்றினையும் காண்பித்து, இறப்பும், பிறப்பும், நினைப்பும், மறப்பும், பகலும், இரவும் ஆகிய இவற்றைக் கடந்து அழியாத இன்பத்தை வழங்கியருளி [எ–று].

விளக்கவுரை:

அறிவுக்கு –உயிர் அறிவிற்கு, இறைவன் உயிர்க்கு உயிர் ஆகி நின்று அறிவத்தாலன்றி உயிர் எதனையும் அறிவதில்லை. ''அகரஉயிர்போல் அறிவாகி'' எனஞானநூல் குறிப்பதும் இது பற்றியேயாம். இவ்வாறு உயிர்க்கு இறைவன் அறிவுதந்து அருளினும் உயிர் எதனையும் எப்போதும்

blic domain. Digitization Muthulakshmi Research Aca

அறிந்துவிட இயலுவதில்லை. அவ்வுயிர் தானும் படிப்படியாக வினைமாசு நீங்கப்பெற்றுப் பக்குவம் பெற்ற பொழுதுதான் இறைவன், தன்னையும் அவ்வுயிரையும் அறியும் அறிவைத் தந்து அருளுகிறான். இது பற்றியே ''அவ்வறிவுக்கு எட்டா நெறியில்'' என்றார். உடம்போடு கூடிய உயிரினம் ஓரிடத்திருப்பின் பிறிதோர் இடத்தில் இருக்க இயலாததாய் உள்ளது. ஆனால் இறைவனோ இவ்விடத்து இருப்பன் இவ்விடத்து இல்லாதிருப்பன் என்பதன்றி எங்கும் நிறைந்திருப்பன். பிரியா கருணை- தன்னிடத்தினின்றும் நீங்காத கருணை. கதிரவனினின்றும் அதன் ஒளி பிரிக்கப் படாதிருப்பதுபோல் இறைவனிடத்தினின்றும் இக்கருணை என்றும் பிரிக்க இயலாததாம். 'சத்திப் பின்னம் இலான்' என ஞானநூல் குறிப்பதும் இதுபற்றியே ஆம். பிரியா என்பது எதுகை நோக்கிப் பிறியா என நின்றது. இவ்வருளே இறைவனின் குருவடிவமும் ஆகும். இத்தகைய இறைவன் உயிர்களுக்கு உருவாக வருதற்கு உயிர்கள் பல்லாற்றானும் திருவருள் துணைக்கொண்டு முயலுதல் வேண்டும். அன்புமிக உண்டாய் அதிலே விவேகம் உண்டாய் துன்ப வினையைத் துடைப்பது உண்டாய இன்பம் தரும் பூரணத்திற்கே தாகம் உண்டாய் ஓடிவரும் காரணர்க்கு இறைவன் குருவாக அருளுவன்.

ஊழ்வினை-பழவினை. இதனைச் சஞ்சிதம் என்ப. உடல் அறுபத்து எட்டு என்பது பருவுடல் நுண்ணுடல் ஆகியவற்றில் இருக்கும் கருவிகளைக் குறிக்கொண்டதாம்.

மண்ணின் கூறு: மயிர், தோல், தசை, எலும்பு, நரம்பு. 5

நீரின் கூறு: குருதி, வெண்ணீர்[விந்து], சிறுநீர், கோழை [சிலேத்துமம்], வியர்வை. 5

தீயின் கூறு : இருதலை [வாய், கருவாய்] வெப்பம், உட்கொள்ளும் உணவு, நீர் முதலியவற்றை அழிக்கும் வெப்பம், உடனுறைவு வெப்பம், மிகு வெப்பத்தால் நிலைமாறும் பித்து. 5

காற்றின் கூறு: உயிர்க்காற்று [பிராணன்], மலக்காற்று [அபானன்], தொழிற்காற்று [வியானன்], ஒலிக்காற்று [உதானன்], நிரவுக்காற்று [சமானன்], தும்மற்காற்று

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

[நாகன்], விழிக்காற்று [கூர்மன்], கொட்டாவிக்காற்று [கிரிகரன்], இமைக்காற்று [தேவதத்தன்], வீங்கற்காற்று [தனஞ்சயன்]. 10

விண்ணின் கூறு: இடப்பால் நரம்பு, வலப்பால் நரம்பு, நடு நரம்பு, இடக்கண் நரம்பு, வலக்கண் நரம்பு, இடச்செவி நரம்பு, வலச்செவி நரம்பு, உள்நாக்கு நரம்பு, கருவாய் நரம்பு, எருவாய் நரம்பு. 10

குற்றங்கள்: மகளிரை விரும்புதல், மாறுபாடு, இலறன்மை, எப்பொருள்களிலும் வேட்கை கொள்ளுதல், தன்முனைப்பு. 5

தொழிற்கருவிகளின் தொழில்: பேசல், நடத்தல், கொடுத்தல், மலக்கழிவு செய்தல், கருக்கழிவு செய்தல். 5

தன்மாத்திரைகள்: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். 5

வாக்குகள்: நுண்ணோசை [சூக்குமை], நினைவோசை [பைசந்தி], மிடற்றோசை [மத்திமை] செவியோசை [வைகரி]. 4

முக்குணங்கள்: அமைதி, வெகுளி, மடி 3

மும்முனைப்புக்கள்: தைசதம், வைகாரிகம், பூதாதிகம். 3

ஆகப் பருவுடற் கருவிகள் 60

பூதம் ஐந்தின் நுட்பம் –	1
தன்மாத்திரை ஐந்தின் நுட்பம் –	1
தொழிற்கருவியின் நுட்பம் –	1
தொழில் நுட்பம் –	1
அறிகருவிகள் ஐந்தின் நுட்பம் –	1
கரண நுட்பம் –	1
ஐங்கலைகளின் நுட்பம் –	1
பிரகிருதிமாயையின் நுட்பம் –	1
ஆக நுண்ணுடற் கருவிகள்	8

அறுபத்து எட்டு என்பதை 6+10+8 எனப் பிரித்துக் கூட்டி ஆன்ம தத்துவம் இருபத்து நான்கையும் குறிப்பதாகக் கொள்வாரும் உளர்.

blic domain. Digitization Muthulakshmi Research Aca

நிலம் ஏழாவன:- மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை, துவாத சாந்தம் என்பன. அத்துவா ஆறும் முன் விளக்கப்பட்டது. இருள் பிற பொருளை அறிய ஒட்டாது மறைப்பதுபோல ஆணவமும் உயிர்க்குப் பிற பொருளை அறிய ஒட்டாது தடுத்தலின் அதனைப் படலம் [திரை] என்றார். அடிஞானம்- திருவடியை அறியும் சிவஞானம். புவனம்-உலகு. உலகு 224 என்பர். முடியாது- எல்லையில்லாது. தேக்கும்- நிறைந்த. போக்கு-இறப்பு. வரவு- பிறப்பு. நினைப்பும் மறப்பும் அற்ற நிலை சும்மா இருக்கும் நிலையாம். சும்மா இருப்பது என்பது வறிதே இருப்பது அன்று. மனத்தை ஒருநிலைப்படுத்தி திருவருளிலேயே ஒன்றி நிற்பதாகும். 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது காண்' எனத் தாயுமானார் கூறுவதால் இந்நிலையின் அருமையும் தகவும் தெரிய வரும். இந்நிலை கைவரப் பெற்றார்க்கு இரவென்பதும் இல்லை பகலென்பதும் இல்லை. உலவா இன்பம்- என்றும் அழியாத இன்பம். மருவு வித்து- நுகருமாறு செய்து. உயிர்களில் ஆணவமென்னும் ஒரு மலமுடையாரை விஞ்ஞானகலர் என்றும் , ஆணவம், கன்மம் ஆகிய இருமலம் உடையாரைப் பிரளயாகலர் என்றும், ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலம் உடையாரைச் சகலர் என்றும் ஞானநூல்கள் கூறும். அவர்களுள் சகலர்க்கு அருளுமாற்றை இப்பகுதி விளக்குகிறது. பிரளயா கலர்க்கும் விஞ்ஞானகலர்க்கும் அருளுமாற்றை மேல் கூறுப.

இருமலமுடையார்க்கும், ஒருமலமுடையார்க்கும் அருளுமாறு

30. கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றும் தாழ்சடையும்
வன்மழுவும் மானுமுடன் மால்விடைமேல் - மின்னிடத்துப்

31. பூத்த பவளப் பொருப்[பு] ஒன்று வெள்ளிவெற்பில்
வாய்த்தனைய தெய்வ வடிவாகி -மூத்த

32. கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய்[து] உள்நின்[று]
ஒருமலத்தார்க்[கு] இன்பம் உதவிப் - பெருகியெழு

33. மூன்றவத்தை யுங்கழற்றி முத்தருடனே இருத்தி
ஆன்றபர முத்தி அடைவித்துத்.

பொழிப்புரை:

கன்மமும் ஆணவ மலமும் உடைய பிரளயாகலர்க்கு தாமரை மலர் போன்ற முக்கண்ணும், பின்னே தாழுகின்ற சடையும், வலிமை பொருந்திய மழுப்படையையும் மான்கன்றையும் கொண்ட திருக்கைகளுமாகப் பெருமை பொருந்திய ஆனேற்றின் மீது, மின்னற்கொடியை இடப்பக்கத்தே கொண்டு தோன்றிய பவளமலையொன்று வெள்ளிமலைமேல் எழுந்தருளியது போன்ற தெய்வ வடிவான திருமேனி கொண்டு, கால எல்லைக்கு எட்டாத ஆணவமும் அதனாலாய கன்மமும் என்ற இரு கட்டுகளையும் வேரறுத்துத் திருவருள் பாலித்து, ஆணவ மலம் ஒன்றுமே உடைய விஞ்ஞானகலர்க்கு அவர் தம் உள்ளத்தே இருந்து மெய்யுணர்வைத் தந்து அதன் பயனாகப் பேரின்பத்தையும் வழங்கியருளி, மேன்மேல் பெருகியெழும் கேவலம், சகலம், சுத்தம், எனும் மூன்று நிலைகளினின்றும் விடுவித்து அவர்களை முத்திப்பேறு அடைந்தார்களுடனே கூட்டி அவர்களுக்கு நிறைவான வீடுபேற்றை வழங்கியருளி (எ–று).

விளக்கவுரை:

கன்ம மலத்தார்– கன்மமலமும் ஆணவமலமும் உடைய பிரளயாகலர். இவர்களுக்கு முக்கண்ணும் நான்கு தோள்களும் உடையனாய் உமையொரு கூறனாய் ஆனேற்றின்மீது இவர்ந்தருளி அருள் வழங்குவன். இனி ஒரு மலத்தாராகிய விஞ்ஞானகலர்க்கு உள்நின்று உணர்த்துவன். எனவே சகலர்க்குக் குருவாக எழுந்தருளியும், பிரளயாகலர்க்கு முன்னின்று அருளியும், விஞ்ஞானகலர்க்கு உள்நின்று அருளியும் ஆட்கொள்வன் என்பது விளங்கும்.

மூன்றவத்தைகளாவன கேவலம், சகலம், சுத்தம் என்பனவாம். கேவலமாவது உயிர் ஆணவத்தோடு பிணிப்புண்டு கிடக்கும் நிலையாம். சகலமாவது உயிர், உடல், கருவிநுகர்வு முதலியவற்றைப் பெற்று வாழும் நிலையாம். சுத்த நிலையாவது உயிர், உடல்கருவிஉலகு ஆகியவற்றை

blic domain. Digitization Muthulakshmi Research Aca

விடுத்துத் திருவருள் பேற்றைப் பெற்று வாழும் நிலையாம். பரமுத்தி- மேலான முத்தி. இது சிவபெருமானின் திருவடியைச்சேரும் இடமாகும். 'சிவனடியைச்சேரும் முத்தி செப்புவது இங்குயாமே' என ஞானநூல் கூறுவதும் இதுவாம்.

யான் எனது என்பவற்றைத் திருவடியாகவும், பேரின்பத்தைத் திருமுடியாகவும் கொண்டருளும் நிலை.

-தோன்றவரும்

34. யான் எனது என்[று] அற்ற இடமே திருவடியா
மோனபரா னந்தம் முடியாக -ஞானம்

35. திருவுருவா இச்சை செயல்அறிவு கண்ணா
அருளதுவே செங்கை அலரா - இருநிலமே

36. சந்நிதியா நிற்கும் தனிச்சுடரே! எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே!

பொழிப்புரை:

பார்ப்பதற்குத் தெளிவாகத் தெரியவரும் யான் என்னும் தன்முனைப்பும், எனது என்னும் பொருள் விருப்பும் நீங்கிய இடமே திருவடியாகவும் , பேசா அனுபூதியில் பிறக்கும் பேரின்பமே திருமுடியாகவும், திருவருளேதிருமேனியாகவும், விருப்பம், தொழில், அறிவு என்னும் மூவாற்றல்களே முக்கண்களாகவும், கருணையே சிவந்த கைமலர்களாகவும், பொருந்திய இப்பேருலகமே திருக்கோவிலின் திருமுன்பாகவும் கொண்டு எழுந்தருளிய ஒப்பற்ற பேரொளிப்பிழம்பானவனே! எவ்வுயிர்களிடத்தும் வேறுபாடு இன்றி அருள் சுரந்து நிற்கும் பெருமையனே! [எ-று].

விளக்கவுரை:

எந்நிகழ்ச்சிகளும் இறைவன் அருளாலேயே நிகழுகின்றன அங்ஙனமாகவும் தன்னால் தான் ஆகின்றன எனக் கருதும் நிலை தன் முனைப்பால் ஆயதாம். இதுவே யான் என்பதாகும். உலகிலுள்ள பொருள்கள் அனைத்தும்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

இறைவனுக்கே உடைமையாகும். அங்ஙனமாகவும் அவ்வப் பொருள்களும் தனக்குரியதாகக் கருதுவதும், பற்றுக்கொள்வதும், அவற்றிலுள்ள பெரு விருப்பினாலும் அவற்றின் உண்மைநிலை அறியாமையினாலும் ஆகும், இது எனது என்பதாகும். இவ்விரண்டுமே பிறவிக் காரணமாகும். திருவள்ளுவனாரும் ''பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளானாம் மாணாப்பிறப்பு'' என்பர். இவ்விரண்டும் நீங்கின் இறைவனின் திருவருட்காட்சி புலனாகும். ''யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்'' எனத் திருவள்ளுவனார் கூறுவதும் ஈண்டு அறியத்தக்கதாகும். சூரபதுமனுக்கு ஆணவத்திரை நீங்கியதும் முருகப்பெருமான் அருட்காட்சி தோன்றியது. அத்திரை மீள மூடப்பெற்றதும் அவ்வருட்காட்சியும் மறைந்துவிட்டது. இவ்வுண்மை கந்தபுராணத்தால் அறியலாம். குமரகுருபர அடிகள் ''அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே'' என அம்மையின் அருட்காட்சி தோன்றுமாற்றை அருளுவர். மோனம்- மௌனம். அதனால் விளையும் இன்பம் பேரின்பமாகும். பர+ஆனந்தம்=பரமானந்தம். மேலான இன்பம் என்னும் பொருளது.

இறைவன் எவ்வுயிர்களிடத்தும் விருப்பு வெறுப்புக் கொள்வதில்லை. வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன் அவன். ஆதலின் அவன் அனைத்துயிர்களையும் ஒப்ப மதிப்பவன் ஆவன். இதுபற்றியே ''பின்னமற நின்ற பெருமானே'' என்றார். பின்னம்- விருப்பு வெறுப்பு ஆகிய வேறுபாடு. வேண்டுதல் வேண்டாமையிலான் எனத் திருவள்ளுவர் கூறுவதும் இதுபற்றியாம்.

முருகப்பெருமானின் திருவுருவக் காட்சி
(திருமுடி முதல் திருவாய் வரை)

– மின்னுருவம்

37. தோய்ந்துநவ ரத்நச் சுடர்மணியால் செய்த பைம்பொன்
வாய்ந்த கிரணமணி முடியும் –தேய்ந்தபிறைத்

blic domain. Digitization Muthulakshmi Research Aca

38. துண்ட[ம்] இரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதல் பொட்டழகும் – விண்ட

39. பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்[கு]
அருள்பொழியும் கண்மலர் ஈராறும்– பருதி
40. பலவும் எழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவுமகரக் குழையும் – நிலவுமிழும்

41. புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதக் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்கும் திருமொழியும்.

பொழிப்புரை:

மின்னலின் ஒளியில் தோய்ந்து உருவானது போன்ற ஒன்பான்வகை இரத்தினங்கள் அழுத்திய பசும் பொன்னாலான ஒளிக் கதிர்களை வீசும் அழகிய ஆறு முடிகளும், பதினாறு கலைகளினின்றும் குறைந்த ஆறு எட்டாம் பிறைத் துண்டங்கள் நிரல்படப் பதித்தாற் போன்று திருநீற்றின் மூன்று ரேகை மலர்ந்த திரு நெற்றியில் உள்ள பொட்டுக்களின் அழகும், காலத்தில் மலர்ந்த தாமரைகள் பன்னிரண்டு பூத்தாற்போல, கருணை பொழியும் பன்னிரண்டு திருக்கண் மலர்களும், கதிரவர்கள் பன்னிருவர் தோன்றி ஒளி வீசியதுபோல விளங்கும் பன்னிரண்டு மகர குண்டலங்களும், நிலவென ஒளிவீசும் புன்சிரிப்புத் தோன்றப் பெற்று மலர்ந்த அழகிய குமுத மலர்போலும் சிவந்த திருவாயும், பிறவி வேட்கையை நீக்கும் திருவாக்கும் [எ–று].

விளக்கவுரை:

ஒன்பான் வகை நவரத்தினங்களாவன:– கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன. பசும்பொன் மகுடத்தில் இவ்வொன்பான்வகை நவரத்தினங்களும் பதிக்கபட்டிருப்பது அவ்வொளியை மேலும் மிகுவிக்கின்றது. நக்கீரரும் 'ஐவேறு உருவில் செய்வினை முற்றிய முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி மின்னுறழ் இமைப்பில் சென்னி பொற்ப' எனக் கூறுவர்.

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

தேய்ந்த பிறை எனினும் அது எட்டாம் பிறையைக் குறிக்கும். நெற்றிக்கு உவமையாக எண்ணாள் திங்களைக் குறிப்பதே மரபு. 'பெரியோன் தருக' என்றது சூடின பிறை இரண்டு கலையாதலின் அதனை எண்ணாள் திங்களாக்கித் தருக என்பது கருத்து; என்னை? ''மாக்கடல் நடுவண் எண்ணாட் பக்கத்து, பசுவெண் திங்கள் தோன்றி ஆங்குக், கதப்பயல் விளங்கும் சிறுநுதல்'' [குறுந் –129] என்றார் ஆகலான். –சிலம்பு மனையறம் [38–4] அடியார்க்கு நல்லார்.

பருவமலர்– காலத்தில் மலர்ந்த தாமரை. பருதி பல எனக் கூறினும் பன்னிரு சூரியர்களையே குறிக்கும். பன்னிரு சூரியராவர். தாத்துரு, சங்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திபச்சுவான், யூடன், சவித்துரு, துவட்டா என்போர். முருகப்பெருமானின் திருவாயிலிருந்து வரும் ஒவ்வொரு அருள்மொழியும் பிறவி வேட்கையைத் தீர்ப்பனவாகும் ஆதலின் 'சென்மவிடாய் தீர்க்கும் திருமொழி' என்றார்.

ஆறு திருமுகங்கள்

– வின்மலிதோள்

42.வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூர னைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்தும் திருமுகமும் – எவ்வுயிர்க்கும்

43. ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதரும் செய்ய மலர்முகமும் – சூழ்வோர்

44. வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும் – விடுத்தகலாப்

45. பாச அருள்துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும் – நேசமுடன்

46. போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும் – தாகமுடன்

47. வத்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும்.

blic domain. Digitization Muthulakshmi Research Aca

பொழிப்புரை:

விற்படை ஏந்திய தோள்களையுடைய கொடிய அசுரர்கள் போற்றிப் புகழும் கொடிய சூரபதுமனைக் கொன்று அவனைச் சார்ந்த மற்றுமுள்ள பகைவர்களின் உயிரைப் போக்கிய வீரத் திருமுகமும், அனைத்துயிர்கட்கும் அமைந்த பழவினைகளைப் போக்கி என்றும் அழியாத பேரின்பப் பெருவாழ்வைத் தந்தருளும் சிவந்த தாமரை மலர்போன்ற திருமுகமும், உயிர்களை விட்டு நீங்காத ஆணவ இருளை ஓட்டிப் பல கதிரவர்கள் ஒருங்கு திரண்டாற்போல ஒளி வீசுகின்ற மணம் பொருந்திய தாமரை மலர் போன்ற திருமுகமும், அன்புடன் தன்னைப் பெற்று மகிழ எண்ணும் வள்ளியம்மைக்கும் தெய்வயானை அம்மைக்கும் ஆர்வமிகுக்கின்ற திருமுகமும், திருவருளைப்பெறவேண்டும் என்னும் பெருவேட்கையுடன் தன்னையே பற்றுக்கோடு என வந்து நிற்கும் அடியவர்கள் மனம் மகிழுமாறு அவர்கள் வேண்டிய வரங்கள் பலவற்றையும் வழங்கியருளும் தெய்வத்தன்மை வாய்ந்த தாமரை போன்ற திருமுகம் ஆகிய ஆறு திருமுகங்களும் [எ-று].

விளக்கவுரை:

சூரபதுமன் மேதக்க வரம்பெற்ற காரணத்தால் தன் முனைப்புக் கொண்டவன் ஆதலின் அவனையும் அவனைச் சார்ந்த தாரகன் சிங்கமுகன் முதலானோர்களையும் முருகப்பெருமான் அழித்தார். நக்கீரரும் ஒருமுகம் ''செறுநர்த்தேய்த்துச் செல் சமம் முருக்கிக் கறுவுகொள் நெஞ்சமொடுகளம் வேட்டன்றே' எனக் குறிப்பர். அருணகிரியார் ''மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே'' என்பர். எனவே பகை நீக்குதற்கென ஒருமுகம் உளது என்பது பெறுதும்.

உயிர்கள் செய்த வினையை வீட்டுதற்கு இறைவன் திருவருள் துணை ஒன்றே பற்றுக்கோடாகும். 'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு' என்பர் திருவள்ளுவரும் அருணகிரியாரும் 'கூறும் அடியார்கள்வினைதீர்த்தமுகம் ஒன்றே' என்பர். எனவே வினை நீக்குதற்கு என ஒருமுகம் உளது என்பது பெறுதும்.

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

வடிக்கும் பழமறைகள்– குற்றமறக் கற்கும் வேதங்கள். வேதங்களும் ஆகமங்களும் இறைவனை அடைதற்குரிய வழிகளைக் கூறுவன. அந்நூல்களை முற்ற உணர்தலும் அதற்குத் தக நிற்றலும் அதனாலாய பயனைப் பெறுதலுமே அக்கலைகளையுணர்ந்ததனாலாய முடிந்த பயனாகும். அதனைப் பெறுதற்கு வெறும் புலமை ஒன்றும் போதாது. முருகப்பெருமானின் திருவருள் முழுமையாக வேண்டும். அவ்வாறு முடிவு போகக்கற்றுத் தெளிந்து பயன்பெறுதற்காகவே ஒரு திருமுகம் உள்ளது. 'பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால் கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய்'' என அடிகள் சகலகலாவல்லியிடத்து வேண்டுதலும் இவ்வுண்மையை விளக்கும். இவ்வாறன்றிப் பாடலையும் பாடற்பொருளையும் அறிதலில் மட்டும் பயன் விளைந்து விடுவதில்லை. 'நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக' எனக் காரைக்கால் அம்மையார் கடிந்து கூறுவதும் இதுபற்றியேயாம். நக்கீரரும், 'ஒருமுகம் எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித் திங்கள்போலத் திசை விளக்கும்மே' என அருளுவர். எனவே கலையின் பயனைத் தருதற்கு என ஒருமுகம் உளது என்பது பெறுதும்.

பாச இருள்– பாசமாகிய இருள். ஆணவத்தையும் அதனாலாய கன்மத்தையும் நீக்குதற்கே உயிரினிடத்து மாயா தத்துவங்கள் கூட்டப்பெற்றன. அம்மூன்றையும் பாசமென்பர். இவை உயிர்க்கு அறியாமை, மறதி முதலிய பல தீங்குகளையும் விளைவிக்கின்றன. இவற்றை நீக்குதற்கே ஒருமுகம் அமைந்துள்ளது. நக்கீரரும், 'மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்' என்பர். எனவே உயிர்களுக்கு இருள் நீக்குதற்கு என ஒருமுகம் அமைந்துள்ளது என்பது பெறுதும்.

வள்ளியம்மையும், தெய்வயானை அம்மையும் பன்னாள் வரங்கிடந்து முருகப்பெருமானை அடையப் பெற்றவர்கள் ஆதலின் அவர்கள் விரும்பியாங்கு இன்பம் தருதற்கென ஒரு முகம் அமைந்துள்ளது. நக்கீரர், 'குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின் மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே' எனக் குறிப்பர். அருணகிரிநாதர், 'வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்றே' என்பர். இவ்விருவரும் வள்ளியம்மையாரை மட்டுமே குறித்தது

blic domain. Digitization Muthulakshmi Research Aca

அவரைக் களவு வழி வந்த கற்பால் மணந்தமை போலும். எனவே ஒருமுகம் இன்பமளித்தற்காகவே உளது என்பது பெறுதும்.

உயிரினங்கள் பலவும் எத்துணையோ வகையில் அவாக் கொள்ளுகின்றன. தாம் கொண்ட அவாநிறைவேறினும் அவற்றைச் சிறிதாக்கி மேலும் அவாக் கொள்ளுகின்றன. 'ஆரா இயற்கை அவா' எனத் திருவள்ளுவனார் கூறுவதும் ஈண்டு நினைவு கூரத் தக்கது. எனவே உயிரினங்கள் வேண்டுவதை எல்லாம் வழங்கவே ஒருமுகம் அமைந்து உள்ளது. நக்கீரரும், 'ஒருமுகம் ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிப் காதலின் உவந்து வரங்கொடுத்தன்றே' எனக் கூறுவர். எனவே ஒருமுகம் உயிர்களைப் புரந்து வரங்கள் நல்குதற்காகவே உளது என்பது பெறுதும்.

பன்னிரண்டு திருத்தோள்கள்

– கொந்தவிழ்ந்த

48. வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும்

பொழிப்புரை:

கொத்தாக மலர்ந்த தேன்மிகுந்த கடப்ப மலர்மாலையும் மணங்கமழும் குராமலர் மாலையும் மணந்து விளங்குகின்றதும் எவற்றையும் தாங்குதற்குரிய வலிமை மிகுந்ததுமான பன்னிரண்டு திருத்தோள்களும் [எ–று].

விளக்கவுரை:-

முருகன் உயிர்கட்கு நுகர்வையும் [போகம்] ஞானத்தையும் [யோகம்] ஒருங்கு வழங்க வல்லவன். கடப்ப மலரும், குராமலரும் முறையே இவற்றின் அடையாளமாக விளங்குவன என்பர். எனவே உயிர்கள் அனைத்திற்கும் இவ்விரு வகை நலங்களையும் ஒருங்கு வழங்கி வாழ்விக்கும் வல்லமையும், அதற்கான பொறுப்பையும் [சுமை : பாரம்]

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

தோளுக்கு உளவாதல் பற்றிப் 'பாரப்புயசயிலம்' என்றார். சயிலம்– மலை.

பன்னிரண்டு திருக்கைகள்

–ஆரமுதம்

49. தேவர்க்கு உதவும் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும் – ஓவாது

50. மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும் – மார்பகத்தில்

51. வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கில் ஒருகரமும்– மொய்த்த

52. சிறுதுடிசேர் கையும்மணி சேர்ந்ததடங் கையும்
கறுவுசமர் அங்குசஞ்சேர் கையும்– தெறுபோர்

53. அதிர்கே டகம்சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்கும் கரமும்

பொழிப்புரை:

பெருகிய அமிழ்தைத்தேவர்க்கு வழங்கும் திருக்கை ஒன்றும், தேவ மகளிர் அன்போடு அணுக அவர்களைத் திருவுளம் குழைந்து தழுவிக்கொள்ளற்கென அமைந்த மென்மையான திருக்கை ஒன்றும், இடையறாது மழை பொழிதற்கெனஉதவுகின்ற திருக்கைஒன்றும், பூமாலைகளை ஒருங்கணிந்த திருக்கை ஒன்றும், திருமார்பில் வைத்தருளிய திருக்கை ஒன்றும், இடையில் இடப்பக்கத்தே வைத்தருளிய திருக்கை ஒன்றும், நிறைந்த ஓசையை உடைய சிறிய உடுக்கை அமைந்த திருக்கை ஒன்றும் , ஒலியெழுப்புவதற்கு உரிய மணியைப் பிடித்திருக்கின்ற திருக்கை ஒன்றும், சினத்திற்கு உரிய போர் செய்தற்கு என அங்குசம் அமைந்த திருக்கை ஒன்றும், பகைவரை அழிக்கும் போரில் ஒலிக்கின்ற கேடகம் என்னும் படையைச் சுழற்றுகின்ற அழகிய திருக்கை

blic domain. Digitization Muthulakshmi Research Aca

ஒன்றும், ஒளி வீசுகின்ற வாளை அசைக்கும் திருக்கை ஒன்றும் ஆகப் பன்னிரு திருக்கைகளையும் [எ-று].

விளக்கவுரை:

ஆரமிர்தம்–நிறைந்த அமிழ்தம். இதனை உண்டார் நெடிது இருப்பர் என்பது பற்றிச் சாவா மருந்து என்பர். சூர்மகளிர்– அஞ்சத்தக்க மகளிர். இவர் தெய்வப் பெண்களாவர். வாம மருங்கு– இடப்பக்கமுள்ள இடை. 'சிறுதொ டிசேர் ' என்பது பாடமாயின் சிறிய வீரவளையலை அணிந்த எனப் பொருள் கொள்க. மணி– உருத்திராக்க மணி எனலுமாம். நக்கீரரும் இத்திருக்கைகளின் செய்கைகளை,

"விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை, உக்கம் சேர்த்தியது ஒருகை,
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது
ஒருகை,
அங்குசம் கடாவ ஒருகை, இருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப, ஒருகை
மார்பொடு விளங்க , ஒருகை
தாரொடு பொலிய, ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக்கொட்ப, ஒருகை
பாடுஇன் படுமணி இரட்ட, ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய, ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட
ஆங்கப் பன்னிரு கையும் பாற்பட இயற்றி"

எனக் கூறுவர்.

திருமார்பு

–முதிராத

54. கும்ப முலைச் செவ்வாய்க் கொடியிடையார்
வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும் – பைம்பொன்

55. புரிநூலும் கண்டிகையும்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

பொழிப்புரை:

இளமைத் தன்மை வாய்ந்த கும்பம் போன்ற திருமுலைகளையும் சிவந்த கொடி போன்ற இடையையும் உடைய வள்ளியம்மையாரும் தெய்வயானை அம்மையாரும் விரும்பித் தழுவியதும், அழகிய பொன் இரத்தினங்களால் ஆய அணிகளை அணிந்ததுமான அகன்ற மார்பும், பசும்பொன்னால் செய்த முந்நூலும், உருத்திராக்க மணியும் [எ–று].

விளக்கவுரை:

கொடியிடையார்– கொடி போன்ற இடையினை உடையார்; வள்ளி தெய்வயானையம்மையார். விண்ணுலக மகளிர் என்பாரும் உளர். பூண் –அணி. புரிநூல்– முப்புரிநூல். கண்டிகை – உருத்திராக்க மாலை.

திரு அரை

55. பூம்பட்டுடையும்
அரைஞாணும் கச்சை அழகும் – திருவரையும்

பொழிப்புரை:

அழகிய பட்டாடையும், அரை ஞாணும், அரைக்கச்சு அணிந்த அழகிய திரு இடுப்பும்.

திருவடியும் சிலம்பும்

56. நாதக் கழலும் நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத்[து] அணிந்த பரிபுரமும்

பொழிப்புரை:

ஒலிக்கின்ற வீரக்கழலும், விளங்குகின்ற மணிகள் பதிக்கப் பெற்ற பொன்னாலாகிய சதங்கையும், சிலம்பும் அணிந்த திருவடிகளும் [எ–று].

விளக்கவுரை:

நகுமணி– ஒலிக்கின்ற மணி எனலும் ஆம்.

blic domain. Digitization Muthulakshmi Research Aca

தெய்வ வடிவு

– சோதி

57. இளம்பருதி நூறா யிரங்கோடி போல
வளந்தரு தெய்வீக வடிவும் – உளந்தனிற்கண்டு

58. ஆதரிப்போர்க்[கு] ஆருயிராய் அன்பர்[அ]கத்தாமரையின்
மீதிருக்கும் தெய்வ விளக்கொளியே!

பொழிப்புரை:

ஓர் இலக்கம் கோடி இளங்கதிரவர்கள் ஒளிபரப்பினாற் போல ஒளிமிகும் தெய்வத்தன்மை வாய்ந்த திருமேனியும், மனதில் இத்தகைய திருவடிவை அகக்கண்ணால் கண்டு காதலிப்பவர்களுக்கு உயிர்க்குயிராய் விளங்கி அவ்வன்பர்கள் நினைத்த வடிவில் அவர்தம் அகத்தாமரையின்கண் வீற்றிருக்கும் தெய்வத்தன்மை வாய்ந்த விளக்கொளியானவனே! [எ–று].

விளக்கவுரை:

நூறாயிரம் கோடி– ஓர் இலக்கம் உடைய கோடி அன்பால் நினைவாரது உள்ளக்கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேரும் இயல்பினனாதல் பற்றி இவ்வாறு கூறினார். ‘‘யாரொருவர் உள்குவார் உள்ளத்து உள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற திறமும் தோன்றும்’’ என அப்பர் அடிகள் அருளுவதும் நினைவு கூறத்தக்கதாகும்.

ஓங்காரத்து உள்ளொளி

–ஓதிய ஐந்து

59. ஓங்காரத்து உள்ளொளிக்கும் உள்ளொளியாய்
ஐந்தொழிற்கும்
நீங்காத பேருருவாய் நின்றோனே!

பொழிப்புரை:

அருளாளர்களால் சொல்லப்பெறும் ஐந்து உறுப்புகளையுடைய ஓங்காரத்தின் உள்ளிருக்கும் உள்ளொளியாய் அவ்விடத்திருந்து படைப்பு முதலிய ஐந்தொழில்களையும் இயற்றுதற்கு நான்முகன் முதலிய

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

ஐவகைக் கடவுள்களாகவும், அமைந்து நிற்கின்ற பெரிய வடிவைக் கொண்டு இருந்தவனே! [எ-று].

விளக்கவுரை:

அகரம், உகரம், மகரம், விந்து, நாதம் எனும் ஐயுறுப்புக்களை உடையது ஓம் எனும் பிரணவமாகும். வட்டவடிவமான ஒளி வடிவாய் விந்து தத்துவம் விளங்குகின்றது என்றும், அதன் நடுவில் நாதம் திகழுகின்றது என்றும், அதன் நடுவில் அகரம் அமைந்து உகரம் தோன்றி மகரம் மின்னுகிறது என்றும் அறிஞர் கூறுவர். அகரமாக எழுந்து உகரமாகக் குவிந்து மகரமாக ஒடுங்கும் அவ்வொளி என்பர். அகரத்தில் பிரமனும், உகரத்தில் மாலும், மகரத்தில் உருத்திரரும், நாதத்தில் சதாசிவமும், விந்துவில் மகேசனும் இருந்து இப்படைப்பு முதலிய ஐந்தொழிலும் செய்வர். அகார உகார மகாரம் ஆகிய மூன்றும் கூடி ஓம் என ஒலிக்கும்போது நாதமாய் நிற்கும். வரிவடிவு கொள்ளும்போது விந்துவாய் விளங்கும் என்பர். பிரணவத்தைச் சமட்டிப்பிரணவம், வியட்டிப்பிரணவம் என இருவகைப்படுத்திக் கூறுவர். ஓம் எனக் கூட்டிச் சொல்லுகின்றபோது அது சமட்டியாம். அகர முதலாகப் பகுத்துக் காணுகின்றபோது அது வியட்டியாம். ஓங்காரத்தின் உள்ளுறுப்பாக அகர முதலிய ஐவகை உறுப்பும் உளவாம். அவற்றின் உள்ளொளியாய் விளங்குவது நுண்ணிய திருவைந்தெழுத்தாம் [சூக்கும பஞ்சாட்சரம்] என்பர். அதுவே 'சிவாயநம' என்பதாகும்.

ஆறுவழிகளையும் (அத்துவாக்கள்) திருமேனியாகக் கொண்டருளல்

– தாங்கரிய

60. மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப் – பந்தனையால்

61. ஒத்த புவனத்[து] உருவே உரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா– வைத்த

62. கலையே அவயவமாய்க் காட்டும் அத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்!

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

(தெ-ரை) ஒன்றையொன்று ஒவ்வாது வளர்ந்து வரும் நல்வினை தீவினை ஆகிய இரண்டின் கண்ணும் ஒத்த உவர்ப்புத் தோன்றி அவற்றின் பயனையும் சமமாகக் கருதப்படும் பொழுதே இறைவனது திருவருட்சத்தியும் உயிரிற்பதிந்து அதனைப் பற்றிக் கொள்ளுதல் நிகழும் என்பதாம்.

இருவினைகள் நேராக– நல்வினை தீவினை என்னும் இருவினையின் கண்ணும் உவர்ப்புத் தோன்றுதல். நேராதல்– அவற்றைச் சமமாகக் கருதும் நிலை ஏற்படுதல். 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என நினைத்து வாழ்தலே இவ்வனுபவமாகும். இந்நிலை உயிர்கட்கு ஏற்பட்டாலன்றி இறைவன் குருவாக எழுந்தருளிவந்து தனது அருளைப் பதிவித்தல் கூடாது என்பதாம்.

"உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாம லென்வினை யொத்தபின்
கணக்கி லாததிருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே"

என்னும் திருவாசகமும்,

"புண்ணிய பாவம் இரண்டுள பூமியில்
நண்ணும் பொழுது அறியார்சில ஞானிகள்
எண்ணி யிரண்டையும் வேரறுத்து அப்புறத்து
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வீரே.

என்னும் திருமந்திரப் பாடலும் இக்கருத்தினை விளக்கி நிற்றல் காண்க.

52. ஏகன் அனேகன் இருள்கருமம் மாயையிரண்(டு)
ஆகஇவை ஆ(று) ஆதி யில்.

(தெ-ரை) ஒருவனாகிய இறைவனும், அளவில்லாதன வாகிய உயிர்களும், இருள்வடிவாகிய ஆணவ மலமும், வினையும், சுத்தம், அசுத்தம் ஆகிய இருவகை மாயையும் ஆகிய இப்பொருள்கள் ஆறும் அனாதியாகவே உள்ளனவாம்.

blic domain. Digitization Muthulakshmi Research Acad

'ஒருவனே தேவன்', 'ஒன்று என்றது ஒன்றேகாண்' என்பவாகலின் இறைவன் ஒருவனேயாவன் என்பது விளங்கும். 'பசுப்பலகோடி' 'உடைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனிபேதம்' என்பவாகலின் உயிர்கள் பல என்பது நன்கு விளங்கும். இருள், கன்மம், மாயை என்பன மும்மலங்களாகும்.

சுத்தமாயை-சுத்த உலகிற்குக் காரணமாய்த் துன்பத்தோடு விரவுதலின்றி இன்ப மாத்திரையே பயப்பது. அசுத்த மாயையும் பிரகிருதி மாயையும் வியாபித்து நிற்பது.

அசுத்த மாயை-மலங்கன்மங்களோடு விரவி இன்ப துன்பம் இரண்டும் பயப்பது. அசுத்த உலகிற்குக் காரணமாய் நிற்பது. சுத்தமாயையின் கீழாய் அடங்கி நிற்பது.

> "பலவயினானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
> அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே".

என்ற இலக்கணத்தால் அஃறிணை முடிபு கொண்டது. இது திணைவழுவமைதி.

53. செய்வானும் செய்வினையும் சேர்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளன்என்(று) உணர்.

(தெ-ரை) வினைகளைச் செய்கின்றவனும், அவனால் செய்யப்படும் நல்வினை தீவினைகளும், அவற்றின் பயனாகிய இன்பதுன்பங்களும், அவற்றை ஊட்டுவிக்கும் இறைவனும் என்னும் இந்நான்கினையும், உயிராகிய நீ உய்தற்பொருட்டு உணர்வாயாக என்பதாம்.

இந்நான்கும் உளவென உணராவிடில், தான், அல்லாததனைத் தான் என்றும், தன்னுடையது அல்லாததைத் தன்னுடையதென்றும் கருதும் யான் எனது என்னும் செருக்கு வளரும். அது வளரவே பிறவித் துன்பமும் இடையறாது வளரும். ஆதலால் தான் , உயிர்கள் உய்வதற்காக இந்நான்கினையும் உணர வேண்டும் என்று கூறுகிறார். உய்வான்- உய்வதற்காக. உளன் என்றுஉணர் [இந்நான்கும்] உண்டு என்று உணர்வாயாக.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்ஙனமன்றி இத்தொடருக்குத் தன்னை ஈடேற்றுதற்காக [இந்நான்கையும்] பொருந்துபவன் ஆன்மா என்றுரைப்பாரும்[1] உளர். இனி 'உய்வானும்' என்று பாடமோதி மோட்சத்தை அடைகிறவனும் என்றுரைப்பாரும்[2] உளர். இவர் கருத்தின்படி 'செய்வானும் உய்வானும்' என்ற இரு சொற்களும் புருடனாகிய ஒருவனையே குறிக்கின்றன. இக்கருத்து ஆய்தற்குரியது.

"செய்வினையும் செய்வானும் அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக் கொண்டே
இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக்கில்லையென
உய்வகையால் பொருள் சிவன் என்று அருளாலே உணர்ந்தறிந்தார்".

என வரும் சேக்கிழார் வாக்கின் கருத்தினை இத்திருவருட்பயன் முகந்து நிற்றல் காண்க.

54. ஊன்உயிரால் வாழும் ஒருமைத்தே ஊனோடுஉயிர்
தான் உணர்வோ(டு) ஒன்றாம் தரம்.

(தெ-ரை) உடம்போடு கூடிய உயிர், திருவருளோடு கூடி ஒன்றுபட்டு வாழும் முறைமை, உடம்பு உயிரோடு கூடி ஒன்றுபட்டு வாழும் முறைமை போன்றதாம்.

உடல் இயக்கத்திற்கு உயிர் காரணமாதல்போல, உயிரியக்கத்திற்குத் திருவருள் காரணம் என்பது இதன் கருத்தாகும். உணர்வு- திருவருள். ஒன்றாந்தரம்- ஒன்றுபட்டு நிற்கும் முறைமை.

55. தன்நிறமும் பன்னிறமும் தானாம்கல் தன்மைதரும்
பொன்நிறம்போல் மன்நிறம் இப் பூ.

(தெ-ரை) பளிங்குக்குரிய தன்மையாகிய தன் நிறத்தையும் தன்னைச்சேர்ந்த பொருள்களில் பலவேறு நிறங்களையும் காட்டுதற்குக் கதிரவன் காரணமாதல் போல, இவ்வுலகில் இறைவனது திருவருளும் அமைந்துளது என்பதாம்.

---

[1] சு. சிவபாத சுந்தரம், [2] சிந்தனையுரை.

blic domain. Digitization Muthulakshmi Research Acad

பளிங்கு தன் நிறத்தைக் காட்டுதற்கும் தன்னைச் சார்ந்த பொருள்களின் நிறத்தைக் காட்டுதற்கும் கதிரவன் ஒளி துணையாதல்போல, உயிர்க்கும் தனது இயல்பாகிய வீடு அடைதற்கும் சார்ந்ததன் வண்ணமாக அமைந்து நிற்கும் பிறவியில் உழல்தற்கும் இறைவனது திருவருளே துணையாகின்றது என்பது இதன் கருத்து. இதனால் பெத்தம், முத்தி இரண்டிற்கும் இறைவன் அருள் இன்றியமையாததாதல் தெளியலாம். கல் [தனது] தன்மையாகிய தன்னிறமும், தான் ஆம் பன்நிறமும் தருதற்கும் பொன்நிறம் [காரணமாதல் போல] இப்பூவின் மன் நிறம் [உளது] எனக்கூட்டுக.

56. கண்டுஒல்லை காணும்நெறி கண்ணுயிர் நாப்பண்ஒளி
உண்டுஇல்லை அல்லாது ஒளி.

(தெ-ரை) கண்ணானது விரைந்து ஒரு பொருளைக் காண வேண்டின், அக்கண்ணொளிக்கும் காணப்படுகின்ற பொருளுக்கும் இடையே விளக்கு ஒளியோ அன்றிப் பிற ஒளியோ வேண்டும். அவ்வொளி இன்றேல் கண்ணினால் எதனையும் அறிய இயலாது. அதைப்போலவே உயிர்க்கும் உயிரால் அறியப்படும் பொருளுக்கும் இடையே திருவருள் நின்றாலன்றி எவற்றையும் அறிய இயலாது என்பதாம்.

கண், ஒளியின் துணையால் எவற்றையும் அறிதல்போல, உயிரும் திருவருளின் துணையால் எவற்றையும் அறிகின்றது என்பது கருத்து. நாப்பண்–நடுவிடம். ஒளி அல்லாது இல்லை என மாறிக் கூட்டுக. கண்+தொல்லை எனப் பிரிப்பாரும் உளர்'.

57. புன்செயலின் ஓடும் புலன்செயல்போல் நின்செயலை
மன்செயல(து) ஆக மதி.

(தெ-ரை) இழிந்த செய்கைகளில் செல்லும் பொறிகளின் செயல்களுக்கு உயிரின் இயக்கமே காரணமாதல் போல, உயிராகிய உனது செயலுக்கும் இறையருளின் இயக்கமே காரணம் என்றறிவாயாக என்பதாம்.

புலன் செயலுக்கு ஆன்மாவாகிய உனது செயல் காரணமாதல் போல, நினது செயலுக்கும் இறைவனது செயலே

Public domain. Digitization Muthulakshmi Research Academy

காரணம் என்று அறிக என்பது கருத்து. 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே'; தொண்டனேன் நுகருமா நுகரே; 'விளம்புமா விளம்பே' என்றல் தொடக்கத்துத் திருவாக்குகளும் காண்க.

புலன்–ஈண்டுப் பொறியை யுணர்த்திற்று. அது புன் செயலினோடல் "புலன்நிக்கட் போதல் ஒட்டா மெல்லெனவே மொய்க்கும் நெய்க் குடந்தன்னை எறும்பெனவே" என்றும்; "மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின்" என்றும், கூறப்படும் திருவாக்குகளால் உணர்க மன்னுதல்–நிலைபெறுதல். அதன் முதல்நிலையாகிய மன் என்பது ஈண்டு என்றும் அழியாத நிலைபேறுடைய இறைவனைக் குறித்தது . முன்னர் 'மன்நிறம்' [திருவருட்பயன்–55] என்றதும் காண்க.

58. ஓராதே ஒன்றையும் உற்(று) உன்னாதே நீமுந்திப்
பாராதே பார்த்ததனைப் பார்.

(தெ-ரை) நீ திருவருள் எப்படியிருக்குமென்று ஆராயாதே. அதனை உன்னின் வேறாக வைத்துத் தன்முனைப்புற்று நினையாதே. அதனை ஏனை உலகியற் பொருள்களைப்போல நினைந்து நீயாக முன் சென்று பாராதே. உன்னைப் பார்க்கும்படி உதவிக் கொண்டிருக்கிற அத்திருவருளையே எண்ணியிரு. அத்திருவருளையே கண்ணாகக் கொண்டு அனைத்தையும் பார்ப்பாயாக என்பதாம்.

'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்னும் அருள்மொழிக்கிணங்க இறைவனை வணங்குதற்கும், அவனது திருவடியினை அடைதற்கும், அவனது திருவருளைப் பெறுதற்கும் அவனருளே இன்றியமையாது வேண்டப்படும் என்பதாம். அதனைத் தன்முனைப்பால் காணவும் அடையவும் முற்படின் இயலாது என்பது இதன் கருத்தாகும். "அவனருளே கண்ணாகக் காணினல்லால் இப்படியன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்னும் அருள் வாக்கும் ஈண்டு எண்ணுதற் குரியதாகும்.

blic domain. Digitization Muthulakshmi Research Acad

59. களியே மிகுபுல னாக்கருதி ஞான
ஒளியே ஒளியா ஒளி.

(தெ-ரை) ஞானத்தால் பெற்ற பேரின்பத்தையே நீ நினைக்கும் பொருளாகக் கொண்டு, அந்த ஞானத்தையே ஒளியாகக் கொண்டு அதன்கண் அடங்கி நிற்பாயாக என்பதாம்.

களி-பேரின்பம். புலனாக-நினைக்கும் பொருளாக. 'புலமாய்க் கருதி' எனவும்[1] 'புலனுமாய்' 'ஒளியாய்' எனவும் பாடங்கொள்வாரும்[2] உளர்.

60. கண்டபடி யேகண்டு காணாமை காணாமல்
கொண்டபடி யேகொண் டிரு.

(தெ-ரை) உனக்கு ஞானம் எப்படி வெளிப்பட்டதோ அப்படியே அதனைக்கண்டு அறியாமையை விளைவிப்பதாகிய உடலினும், உலகப் பொருள்களிலும் கருத்தைச் செலுத்தாமல், அந்த ஞானம் உன்னை ஏற்றபடியே அதன் வயப்பட்டிருப்பாயாக என்பதாம்.

காணாமை-அறியாமை; ஈண்டு, அது அதனை விளைவிக்கும் உலகு உடல் சம்பந்தமான பொருள்களை யுணர்த்திற்று. இம் மூன்று திருக்குறளும் ஆசிரியர் மாணவனை நேர்முகமாக நோக்கிக் கூறியதாகும். இம்மூன்று பாட்டானும் முறையே ஞானத்தினைக் காணுமாறும், கண்டால் அதனுட் கலக்குமாறும் அவ்வழித் தன்னை அதன் வயத்தனாக்குமாறும் கூறப்பட்டன.

7. உயிர் விளக்கம்

அஃதாவது உயிர் ஆணவ மலம் நீங்கப் பெற்றுத் தன் செயலின்றித் திருவருள் வயப்பட்டு விளக்கமுற்று விளங்கும் நிலையாகும். அதனை ஆன்மசுத்தி என்பர். மேல் குருவருளால் திருவருளை அறியும் முறைமை கூறினார். இனி அவ்வருளால் உயிர் விளக்கம் பெறுமாற்றை இவ்வதிகாரத்தில் கூறுகின்றார். ஆதலின் மேலையதனோடு இயைபுடைத்தாயிற்று.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

61. தூநிழல்ஆர் தற்கு ஆரும் சொல்லார் தொகும் இதுபோல்
தான்அதுவாய் நிற்கும் தரம்.

(தெ-ரை) வெயிலால் வெதும்பியவன் தூய நிழலைச் சேர்தற்கு அங்கே அடைக என எவரும் செல்ல வேண்டுவது இல்லை. அவன் தானாகவே ஓடிச் சேருவான். பொருந்திய இந்த முறைமை போல உலகியல் துன்பங்களில் வருந்திய ஒருவன் திருவருள் நிழல் கண்டதும் அவன் தானே விரைவில் அடைந்து அதுவதுவாய் நிற்பன் என்பதாம்.

இன்ப துன்பங்களின் உவர்ப்பே திருவருள் வேட்கையைப் பிறப்பிக்கும் என்பது இதன் கருத்தாகும். இதற்கு இவ்வாறு அன்றி "ஆதித்தன் உச்சியிலே வந்த காலத்துப் பவித்திரமாகிய ஆதித்தனுடைய நிழல் அதற்குள்ளே அடங்குகிறதற்கு ஒருத்தரும் உபசாரம் சொல்ல வேண்டுவதில்லை; இந்த முறைமையைப் போல இருவினை ஒப்பு வந்த காலத்துத் திருவருள் வந்து அவனைக் கவளீகரித்துக் கொள்ளுதற்கு ஒருவர் சொல்ல வேண்டுவதில்லை"[1] எனவும்; ஒருவனுடைய நல்ல நிழலானது தனக்குள்ளே வியாப்பியமாக அடங்குதற்கு அந்த நிழலிடம் யாரும் சொல்ல வேண்டியதில்லை. நிழல் தானே வந்து சேரும் தன்மை போல, ஆன்மா திருவருளையடைவதற்கு உரியதரத்தினை யாரும் சொல்ல வேண்டியது இல்லை. இருவினையொப்பு நேர்ந்ததும் ஆன்மா தானாகவே அருளோடு பொருந்தும்"[2] எனவும் உரைப்பாரும் உளர்.

62. தித்திக்கும் பால்தானும் கைக்கும் திருந்திடும்நாப்
பித்தத்தின் தான்தவிர்ந்த பின்.

(தெ-ரை) பித்த நோயுடையார்தம் நாக்கிற்குத் தித்திக்கும் பாலும் கசப்பாக இருக்கும்; அப்பித்த நோயின்றும் நீங்கியபின் நாவிற்கு முன்கசப்பாக இருந்த பால் தித்திக்கத் தக்கதாகத் திருத்திவிடும். அவ்வாறே உயிர் மல இருள் உற்றிருக்கும் பொழுது இறைவனது மறைப்பாற்றல் பொழுது

---

[1] சிந்தனையுரை [2] திரு.தே.ஆ. சீனிவாசன்.

blic domain, Digitization Muthulakshmi Research Acad

[திரோதான சத்தி] கசப்பாக இருக்கும்; அம் மலஇருள் நீங்கியபொழுது அக்கசப்பான மறைப்பாற்றலே இனிக்கும் என்பதாம்.

இது ஒட்டணியாகும். பித்த நோயின்றி நன்கிருக்கும் நாவிற்குப் பாலின் இனிமை நன்கு விளங்குதல் போல, மலப் பிணிப்பின்றி இயல்பிலிருக்கும் உயிர்க்கு இறைவனது அருட்சத்தியின் இனிமை நன்கு விளங்கும் என்பது இதன் கருத்தாகும்.

63. காண்பான் ஒளி இருளில் காட்டிடவும் தான்கண்ட
வீண்பாவம் எந்நாள் விழும்?

(தெ-ரை) உயிர் ஆணவ மலத்தின் கட்டுண்டு கிடந்து மயங்கும்போது ஒளிவடிவாகிய திருவருள் தன்னைக் காட்டிட அதனைக் காணும் உயிர் தானே அத்திருவருளைக் கண்டதாக நினைதல் பெரும் பாவமே ஆகும். அது எந்நாள் நீங்கும்? என்பதாம்.

காண்பான் - காணுகின்ற உயிர். ஒளி-திருவருள், இருள்- ஆணவமலம். திருவருள் தன்னைக் காட்டக் கண்டிடும் உயிர் தானே அதனைக் கண்டதாக நினைதல் பெரும்பாவம் என்பது கருத்து. "அவனருளே கண்ணாகக் காணின் அல்லால் இப்படியன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்ற திருவாக்கும் ஈண்டு உணர்தற்குரியது.

64. ஒளியும் இருளும் ஒருமைத்துப் பன்மை
தெளிவு தெளியார் செயல்.

(தெ-ரை) குருடர் ஒளியின் மேன்மையையும், இருளின் கீழ்மையையும் அறியார். அதுபோல, உயிர், இறை, தளை ஆகிய இவற்றின் உண்மையை அறியாதாரும் இறையின் மேன்மையையும் தளையின் கீழ்மையையும் அறியார் என்பதாம்.

பன்மை-உயிர், இறை, தளை ஆகியன. பொருளில் வரும் தெளியார் என்ற சொற்கேற்ப உவமையில் குருடன் என்ற

Public domain. Digitization Muthulakshmi Research Acade

சொல் வரவழைக்கப்பட்டது. ஒளியும் இருளும் ஒன்றாகத் தெரிதல் அவர்க்கேயாதலின்.

இதற்கு இங்ஙனமின்றித் "திருவருளும் ஆணவமும் தத்தமக்குரிய பொருளைக் காட்டி ஒழிந்ததை மறைக்குந் தன்மையில் ஒத்திருக்கின்றன. அவைகளுக்குள்ள பேதம் யாதெனில் அருளானது தன்னை அடைந்தோர்க்கு உண்மைப் பொருளைக் காட்டுவதும், ஆணவமானது அது நீங்காதார்க்குப் பொய்யாகிய பொருள்களைக் காட்டுதலுமாம்"[1] என்பாரும் உளர். எனவே அருள் தெளிவைக் காட்டும் என்பது இவர் தம் கருத்து. இவர் கருத்தின்படி பன்மை என்பது வேற்றுமை என்று பொருள்படும்.

65. கிடைக்கத் தகுமோநற் கேண்மையார்க்(கு) அல்லால்
எடுத்துச் சுமப்பானை இன்று.

(தெ-ரை) அருளாகிய நல்ல நட்பைப் பெற்றார்க்கல்லது தமது பாரம் முழுவதையும் எடுத்துச் சுமக்கும் இறைவனைக் கிட்டுதல் கூடுமோ? கூடாது என்பதாம்.

இறைவனது திருவருளாலேயே இறைவனைப் பெறவேண்டும் என்பது கருத்து. உயிர்களால் அளவின்றி ஈட்டப்பட்ட வினைகளுள் பிறந்த உடம்பால் முகந்து நின்றவற்றைப் 'பிராத்துவம்' என்பர். அதனைத் துய்க்கும் பொழுதே மேன்மேலும் செய்கின்ற வினைகளை 'ஆகாமியம்' என்பர். இவ்விரண்டும் திருவருள்வழி நடப்போரை அணுகா என்பதாம். உயிர்கட்குரிய பாரமாகிய இவற்றை எடுத்துச் சுமத்தலாவது இவை அவ்வுயிர்கள் மாட்டு அணுகாமல் செய்வதே யாகும். "அரன் பணியில் நின்றிடவும் அகலும் குற்றம்" [சித்தியார்–பக்கம்–304] என்னும் திருவாக்கும் இவ்வுண்மையை விளக்கி நிற்கும்.

உயிர்க்குயிராய்த் திருவருள் நிற்றலானும், உயிரை நல்வழிப்படுத்தற்காம் துணை அதனினுாங்கு வேறு இல்லை

---

[1] சிவபாத சுந்தரம்.

blic domain. Digitization Muthulakshmi Research Acad

யாதலானும் அதனை 'நற்கேண்மை'[1] என்றார். நற்கேண்மையார் – சரியை கிரியா யோகங்களை அனுட்டித்து முடித்து ஞானபாதக் கேள்வியையுடைய பேர்கள் என உரை காண்பர் சிந்தனையுரைகாரர்.

இக்குறட்பாவினை ஒட்டணியாகக் கொண்டு அதற்கேற்பப் பொருளை வரவழைத்து உரைகாண்பர் நிரம்ப அழகிய தேசிகரும், சு. சிவபாத சுந்தரம் அவர்களும். அவ்வுரை வருமாறு:– அன்பு நிறைந்த சுற்றத்தவரை உடையவர்களுக்கல்லாமல் அவர்களுடைய சுமை எல்லாவற்றையும் எடுத்துச் சுமப்பவன் ஒருவனை, இப்போது பெற்றுக் கொள்ளுதல் கூடுமோ? கூடாது. அதுபோலப் பேரன்பாகிய திருவருளைச் சார்ந்தவர்களுக்கு அவர்களுடைய வினைகளையும் வினைப்பயன்களையும் சுமப்பவராகிய கடவுள் எளிதில் தோன்றுவர்.

66. வஞ்ச முடன்ஒருவன் வைத்த நிதிகவரத்
துஞ்சினனோ போயினனோ சொல்.

(தெ-ரை) ஒருவன் வைத்த நிதியினைப் பிறன் ஒருவன் வஞ்சித்து அதனைக் கவர வேண்டுமாயின், ஒன்று அந்நிதிக்குரியவன் தூங்க வேண்டும்; அல்லது அவன் எங்கேயாவது போயிருத்தல் வேண்டும். இன்றேல் அதனைக் கவர இயலாது. அதுபோலவே அந்தமில் இன்பத்து அழிவில் வீடாகிய நிதியையும், அந்நிதிக்குரிய இறைவனையன்றிப் பெற இயலாது என்பதாம்.

இது ஒட்டணியாம். இதற்கு இங்ஙனமன்றி "வஞ்சகமாக ஒருவன் வைத்த திரவியத்தை எடுத்துக்கொள்ள [வைத்த திரவியத்தை வைத்தவன் வந்துகேட்கையில் இல்லை என்று சொல்ல] தூங்கித்தான் கிடந்தாயோ? அல்லது இல்லாமல்

---

1. "கிடைக்கத் தகுமே" எனப் பாடங்கொள்வர் சிந்தனையுரைகாரர், நிரம்ப அழகிய தேசிகர், தே.ஆ.சீனிவாசன் ஆகியோர். 'நற்கேண்மையார்க்கு எல்லாம்" எனப் பாடங் கொள்வர் நிரம்ப அழகிய தேசிகர்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேறிடம் போனாயோ? அதுபோலச் சிவன், தனு முதலியன கொடுத்திருக்கவும் கொடுத்தவனே வந்து கேட்கையில் இல்லை என்று சொல்லி மறைப்பதனால் மறைத்த ஆன்மாவாவான் சிவனாகமாட்டான், அவன் அடிமையே ஆவான்'' என உரைப்பாரும்[2] உளர். இவர் ''துஞ்சினையோ போயினையோ சொல்'' எனப் பாடங்கொள்வர்.

இன்னும் இதற்கு ''மெய்ஞ்ஞானியாகிய ஒருவர்க்கு அவர் தம் நிதியமாகிய வினையை அவரினின்றும் திருவருள் கவருதற்கு அவர் தூங்கினாரோ அன்றி அவ்விடத்தைவிட்டுப் போயினாரோ சொல்வாயாக என உரை கண்டு மெய்ஞ்ஞானிகளின் வினையை இறைவனே கவர்ந்து கொள்வன் என்றும், மெய்ஞ்ஞானிகளைவினையணுகாமைக்குக் காரணம் அதில் பற்றில்லாமையேயாகும்'' என்றும் பொருள் கூறுவாரும் உளர்.[1]

67. தனக்கு நிழல் இன்றாம் ஒளிகவரும் தம்பம்
எனக் கவர நில்லா(து) இருள்.

(தெ-ரை) கதிரவன் உச்சியில் நிற்கும்போது தன்னுடைய ஒளி தோன்றாமல் அக்கதிரவன் ஒளியால் கவர்ந்து கொள்ளப்படும் படிகத்தூண் போல, உயிர் தன்னறிவு தோன்றப்பெறாமல் திருவருளால் கவர்ந்து கொள்ளப்படுமாயின் அந்நிலையிலே மலம் இல்லாமல் போகும் என்பதாம்.

படிகத்தூண் இருளில் இருளாகியும் ஒளியில் ஒளியாகியும் இருக்கும். அதுபோல உயிரும் மலத்தால் பிணிப்புண்டபோது மயங்கியும், அருளால் பிணிப்புண்டபோது ஒளியாகியும் இருக்கும். கதிரவனின் ஒளி பெருகப்பெருகப் படிகத்தூணின் ஒளியும் பெருகும். அது உச்சியில் வரும்போது தூணின் ஒளி கதிரவனின் ஒளியில் மறைந்தேவிடும். அதுபோலத் திருவருள் பிணிப்பு உயிர்க்குப் பெருகப்பெருக அதன் அன்பும் பெருகும். பின் அது முதிர்ந்த நிலையில் உயிர் சிவமயமாகவே ஆகிவிடும் என்பது கருத்து.

---

[1] திரு. சு. சிவபாதசுந்தரம் – அடிக்குறிப்பு
[2] திரு.தே.ஆ.சீனிவாசன், சிந்தனையுரை.

blic domain. Digitization Muthulakshmi Research Acad

"அன்றிய பாசஇருளும் அஞ்ஞானமும்
சென்றிடும் ஞானச் சிவப்பிர காசத்தால்
ஒன்றும் இருசுடராம் அருணோ தயத்தால்
துன்றிருள் நீங்குதல் போலத் தொலைந்ததே"

என்னும் திருமந்திரச் செய்யுளும் இவ்வுண்மையை விளக்கி நிற்கும்.

68. உற்கைதரும் பொற்கை யுடையவர்போல் உண்மைப்பின்
நிற்க அருளார் நிலை.

(தெ-ரை) தழற் கொள்ளியை அழகிய கையிலே உடையவர்கள், தாம் வேண்டுகின்ற பொருளை இருளில் காணலுறின் அதனை முன்னே பிடித்துக் கொண்டு தாம் பின்னே சென்று அப்பொருளைக் காண்பர். அதைப்போல இறைவனைக் காணவேண்டின் உயிர்களும் திருவருளை முன்னிட்டுக் கொண்டே அதன்வழி நின்று காண வேண்டும் என்பதாம்.

அருளைக் கொண்டே சிவத்தைக் காண இயலும் என்பது கருத்து. "நும்பின் எம்மை நுழையப் பணியே என்பாரும்" என்னும் திருமுறையும் ஈண்டு நினைவு கூர்தற்குரியதாம். உற்கை– தழற்கொள்ளி. உள்ளங்கை என்பர்சிந்தனையுரைகாரர்.

69. ஐம்புலனால் தாம்கண் டதென்றால்* அதுஒழிய
ஐம்புலன் ஆர்தாம் ஆர் அதற்கு.

(தெ-ரை) ஐம்பொறிகளினால் உயிர் எவற்றையும் அறிகின்றன அவை நீங்கினவிடத்து உயிர் எதனையும் அறியாது. ஐம்பொறிகளும் தனித்து எதனையும் அறியாது. அங்ஙனமிருக்க இறைவனைத் திருவருளின் உதவியின்றி அடைய ஐம்பொறிகள் தாம் என்ன வல்லமையுடையன?

---

*'கண்டதன்றால்' எனப் பாடங்கொள்வர் நிரம்ப அழகிய தேசிகர். 'கண்டகன்றால்' எனப் பாடங்கொள்வர் சு. சிவபாத சுந்தரம், தே.ஆ.சீனிவாசன் ஆகியோர்.

Public domain. Digitization Muthulakshmi Research Acade

உயிர்தான் என்ன வல்லமையுடையது? ஒன்றுமில்லை என்பதாம்.

ஐம்புலன் ஆர்தாம் அதற்கு? தாம் ஆர் அதற்கு? எனப்பிரித்துக் கூட்டுக. அதற்கு என்பது இறைவனை அடைதற்கு என்னும் பொருள்பட நின்றது. புலன் என்பது ஈண்டு அதனை நுகர்தற்காம் பொறிகளை யுணர்த்தி நின்றது.

70. தாமேதரும் அவரைத் தம்வலியினால் கருதல்
ஆமே? இவன்ஆர் அதற்கு?

(தெ-ரை) இறைவன் தானே தன்னை உயிர்கட்குத் தரும் பெருங்கருணையாளன். அப்பெருங்கருணையாளனை உயிர்கள்

தம் வலியினால் பெற்றதென்று சொல்லுதற்கு என்ன தகுதியுடையன? சிறிதும் தகுதியில்லை என்பதாம்

இறைவன் தானே தன்னை உயிர்கட்குத் தருவன் என்பதைத் 'தானே தந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்'' என்றும்; 'தான் வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு' என்றும் ; 'தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னை'' என்றும்; ''தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான் தானே வந்து'' என்றும் கூறப்பெறும் அருள் வாக்குகளான் உணர்க.[1]

8. இன்புறு நிலை

அஃதாவது உயிர்கள் பேரின்பத்தைப் பெற்று இன்புறும் நிலைமையாம். மேல் உயிர் திருவருள் விளக்கத்திற்கு ஆளாகுமாறு கூறினார். இதன்கண் அத்திருவருள் விளக்கத்தினால் பெறும் பேரின்ப நிலையைக் கூறுதலின் மேலையதனோடியையபுடைத்தாயிற்று.

---

[1] ''தாமே தருபவரை'' எனப் பாடம் கொள்வர் நிரம்ப அழகிய தேசிகரும், சிந்தனையுரைகாரரும்.

blic domain. Digitization Muthulakshmi Research Acad

71. இன்புறுவார் துன்புறுவார் இருளின்எழும் சுடரின்
பின்புகுவார் முன்புகுவார் பின்.

(தெ-ரை) ஆணவஇருளை நீக்குதற்காக மேல் எழுகின்ற திருவருளின் பின்னே செல்வார், இன்பம் அடைவர். அத்திருவருளைப் பின்னோக்கித் தான்முன்செல்வார் துன்பம் அடைவர் என்பதாம்.

திருவருள் பின்னே செல்லுதலாவது எல்லாவற்றிற்கும் காரணமானவன் இறைவன் என்றும், அவனருள் வழிச்செல்லல் அல்லது நமக்கென ஏதும் உரிமையில்லை என்றும் நினைந்து வாழ்தலாம். இவ்வருள் வழி நின்றதாலேயே அப்பர் பெருமானும் 'இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை' என அருளினார். இருள்-ஆணவம். சுடர்-ஒளி [திருவருள்]

சுடரின் பின்புகுவார் இன்புறுவார், முன்புகுவார் துன்புறுவார் என நிரல் நிறையாகக் கொள்க.[1]

72. இருவர் மடந்தையருக்(கு) என்பயன்? இன்புண்டாம்
ஒருவன் ஒருத்தி யுறின்.

(தெ-ரை) இரு பெண்கள் தம்முள் கூடின் என்ன பயன் உண்டு? ஒன்றுமில்லை. ஆனால் ஒருவனும் ஒருத்தியுமாகக் கூடின் பெரிதும் இன்பம் உண்டாம் என்பதாம்.

இது ஒட்டணியின்பாற்படும். ஒருவனும் ஒருத்தியும் கூடின் இன்பம் உண்டாகுமேயன்றி, ஒரு பெண்ணுடன் இன்னொரு பெண் கூடின் இன்பம் உண்டாகாது என்ற இதனால் உயிர் திருவருளின் துணையால் சிவத்தைக் கூடினால் இன்பமாவதன்றித் திருவருள் துணையுடன் மட்டும் வாழ்ந்தால் இன்பம் இல்லை என்னும் கருத்துப் பெறப்பட்டதாகும். "தாயுடன் சென்று பின் தாதையைக் கூடிஏயுமதே நிட்டை" என்னும் அருள்மொழி ஈண்டு நினைதற்குரியதாகும்.

---

[1] 'துன்பார்' எனப் பாடங்கொள்வர் நிரம்ப அழகிய தேசிகர், சிந்தனையுரைகாரர், சு. சிவபாதசுந்தரம் ஆகியோர்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

73. இன்பதனை எய்துவார்க்(கு) ஈயும் அவர்க்(கு) உருவம்
இன்பகனம் ஆதலினால் இல்.

(தெ-ரை) இறைவன் தன்னை வந்தடைந்தார்க்கு இன்பத்தைத் தருவன். அவனது வடிவமே இன்ப வடிவு ஆதலின், தான் அவ்வின்பத்தை நுகருவதில்லை என்பதாம்.

இதனால் உயிர்களுக்கு இன்பத்தை அளிக்கும் இறைவன் அவற்றிற்கு அதனைத் தருதலின்றித் தான் அதனை நுகரான் என்பது பெற்றாம். காரணம், தானே இன்ப உருவாய் நிற்றலினாலாம். இறைவன் இன்ப வடிவினன் என்பதை,

"ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே"
"அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே;"

என்றல் தொடக்கத்துத் திருவாக்குகளாலும் அறியலாம். இன்பகனம்-இன்ப வடிவம்.

இதற்கு இவ்வாறன்றி, பொருந்துகிற பெயர்களுக்கு இன்பத்தைக் கொடுப்பவன்; கர்த்தாவுக்குத் திருமேனி இன்பக்கட்டி; அதென்போலவென்னில் சர்க்கரையைப் புசிக்கின்றவன் ரசம் பெறுவதொழிந்து அவன் சர்க்கரைக்குக் கொடுக்கும் ரசமில்லை. ஆகையினாலே' ஆன்மா கர்த்தாவுக்கு இன்பத்தைக் கொடுக்க வேண்டுவதில்லை என்றுரைப்பாரும்' உளர்.

74. தாள்தலைபோல் கூடியவை தான்நிகழா வேற்றின்பக்
கூடலை நீ ஏகம்எனக் கொள்.

(தெ-ரை) தாள் என்னும் சொல்லும், தலை என்னும் சொல்லும் புணர்ந்து [தாள்+தலை] தாடலை என்னும் ஒரு சொல்லானது போல, உயிரும் இறையும் சேர்ந்து பிரிக்க இயலாத அப்பேரின்பக் கலப்பே அத்துவிதம் ஆயிற்று எனக்கொள்க என்பதாம்.

' சிந்தனையுரை.

blic domain. Digitization Muthulakshmi Research Aca

தாடலை என்னும் சொல் புணர்ச்சிக்கண் ஒரு சொல்லாய்ப் பிரித்துழி இரு சொல்லாய் நிற்கிறது, அதுபோலவே உயிரும் இறையும் நிற்கும் முறைமை ஆகும். இறைவன் பெத்தத்திலும் முத்தியிலும் உயிருடன் கலந்து நிற்பினும், பெத்தத்தில் ஆணவக் கலப்பினால் தான் உயிர் என இரண்டாயும், முத்தியில் அவ் வாணவம் தன்தன்மை கெட்டு நிற்றலின் ஒன்றாயும் தோன்றும். முத்தியில் ஒன்றாய் நிற்றலை அத்துவிதம் என்பர். துவிதம்-இரண்டு. அத்துவிதம்-இரண்டல்லாதது. இரண்டல்லாதது என்று கூறவேண்டுமேயன்றி இரண்டும் ஒன்றே என்றல் கூடாது. முத்தியிலும் இறைவன் ஆண்டானாய் உயிர் அடிமையாய் நிற்பதன்றி உயிரே இறையாய் நிற்றல் இல்லை. ஆதலினால்தான் உயிரும் இறையும் முத்தியில் நிற்கும் நிலையை அத்துவிதமாதல் என விளக்குவர். இறைவனது நிலையை அத்துவிதமாதல் என விளக்குவர். இறைவனது தாளில் உயிராகிய தலை இயைந்து நிற்றலே பேரின்பம் ஆதலின் 'தாடலை' என்ற சொல்லால் இவ்வுண்மையை விளக்கினார்.

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை."

"தருவாய் எனக்குன் திருவடிக்கீழோர் தலைமறைவே"

"அருளினாலே தாளிணைத் தலைமேல் சூட்டும்"

என்றல் தொடக்கத்துத் திருவாக்குகளாலும் இவ்வுண்மையை அறியலாம். முத்தியில் இறையும் உயிரும் ஒன்றாதல் போல இருப்பினும் அவை ஒன்றனல்ல என்பார் 'ஏகம் என' என்றார்.

75. ஒன்றாலும் ஒன்றா(து)இரண்டாலும் ஓசையெழா(து)
என்றால் ஒன்(று) அன்றுஇரண்டும் இல்.

(தெ-ரை) உயிரும் இறையும் ஒரு பொருளே என்றால் முத்தியில் அவை ஒன்றாக வேண்டுவதில்லை. இரண்டென்றால் பேரின்பம் உண்டாகாது. ஆதலின் அவை முத்தியில் இயைந்து நிற்கும் முறைமை, ஒன்று என்பது

ublic domain. Digitization Muthulakshmi Research Acad
மேன்மை பெறச் செய்தது. எனவேதான் 'மேன்மை பெற' என்றார். உயிர்கள் உய்ய வேண்டும் என்பதல்லது இறைவனுக்கெனவேறு பசியாதுளது? ஒன்றுமில்லை என்பது குறிப்பு. தெய்வக்களிற்றை மணம் செய்தோனே என்றது அவர்தம் இருமுதுகுரவரும் கொடுப்பக் கொண்ட கற்புமணம் பற்றியாம். வள்ளிக் கொடியை மணந்தோனே என்றது தானே அவர்பால் சென்று களவின்வழி வந்த கற்பால் மணந்தமை பற்றியாம்.

அன்பர்க்கு அருளல்

—உள்ளம் உவந்து

109. ஆறு திருப்பதிகண்[டு] ஆறுஎழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே! – நாறுமலர்க்

110. கந்திப் பொதும்பர்எழு காரலைக்கும் சீரலைவாய்ச்
செந்திப் பதிபுரக்கும் செவ்வேளே!

பொழிப்புரை:

உளம் மகிழ்ந்து திருப்பரங்குன்றம் முதலிய ஆறு திருப்பதிகட்கும் சென்று அப்பெருமானுக்குரிய ஆறு எழுத்துக்களையும் அன்புடன் ஓதுமவர் தம் உள்ளத்தில் குடி கொண்டிருப்பவனே! மணம் கமழும் மலர்களையுடைய பாக்கு மரச் சோலையையும் மேகம் வரை எழுந்து அலை மோதும் சிறந்த கடற்கரையையும் உடைய திருச்செந்தூராகிய திருப்பதியை ஆண்டருளும் செவ்வேள் என்னும் திருப்பெயர் உடையவனே! [எ–று].

விளக்கவுரை:

ஆறுதிருப்பதி– திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருஆவினன்குடி[பழனி], திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை. ஆறு எழுத்து – சரவணபவ என்னும் திருமந்திரம். கந்திப்பொதும்பர்– பாக்குமரச்சோலை. கார்–மேகம். கார் எழு என மாற்றுக.

blic domain. Digitization Muthulakshmi Research Acad

வேண்டுகோள்

–சந்ததமும்

111. பல்கோடி சன்மப்பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்– பலகோடி

112. பாதகமும் செய்வினையும் பாம்பும் பசாசும் அடல்
பூதமும்தீ நீரும் பொருபடையும் – தீதகலா

113. வெவ்விடமும் துட்ட மிருகமுத லாம்எவையும்
ஏவ்விடம் வந்[து] எம்மை எதிர்ந்தாலும்– அவ்விடத்தில்

114. பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும் – கச்சைத்

115. திருவரையும் சீறடியும் செங்கையும் ஈரா[று]
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும் – விரிகிரணம்

116. சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற – வந்திடுக்கண்

117. எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்து புகுந்[து]
உல்லாச மாக உளத்திருத்து– பல்விதமாம்

118. ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமும் சீர்ப்
பேசும் இயல்பல்காப் பியத்தொகையும்– ஓசை

119. எழுத்துமுத லாம் ஐந் திலக்கணமும் தோய்ந்து
பழுத்த தமிழ்ப் புலமை பாலித்[து] – ஒழுக்கமுடன்

120. இம்மைப் பிறப்பில் இருவா தனைஅகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத் – தம்மை விடுத்[து]

121. ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகம் துய்ப்பித்துச்– சேய

122. கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்[டு]
அடியேற்கு முன்னின்[று] அருள்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொழிப்புரை:

எப்பொழுதும் பல்கோடிப் பிறப்பாகிய பகையும், இழிநிலைக்கு ஆளாக்கும் எண்ணிறந்த பாவச் செயல்களும், பிறரால் செய்யப்படுகின்ற சூனியம் முதலாயினவும், பாம்பும், பேய்களும், கொல்லுந் தன்மை உடைய பூதங்களும், நெருப்பும், நீரும் ஒலிக்கும் போர்க்கருவிகளும், தீயதன்மையினின்றும் நீங்காத கொடிய நஞ்சும், கொடிய விலங்குகளும் முதலிய அனைத்தும் எந்த இடத்தில் வந்து நின்று எமக்குத் தீங்கு செய்யமுற்பட்டாலும், அந்த இடத்தில் பச்சை நிறம் பொருந்திய மயில் ஊர்தியும், பன்னிரண்டு திருக்கண்களும், ஒப்பற்ற ஆறு திருமுகங்களும், அகன்ற ஒளிக்கதிர்கள் வீசும் திருமுடிகளை அணிந்தருளும் ஒப்பற்ற ஆறு திருமுடிகளும் எந்தத் திசையிலும் எம்கண்முன் தோன்றக் காட்சி கொடுத்தருளித் துன்பங்கள் அனைத்தையும் தூளாகச் செய்து எனக்கு வேண்டும் எல்லா வரங்களையும் தந்தருளி எனது உள்ளத்தின்கண் புகுந்து மகிழ்ச்சியாக எழுந்தருளியிருந்து பல்வேறு வகையில் பாடப்படுகின்ற ஆசுகவி முதலாகிய நாற்கவிகளும், ஒரேகாலத்தில் எண்வகை வினாக்களுக்கும் விடை தரும் நினைவாற்றலும் , நின் பொருள் சேர் புகழையே விரித்துப் பேசும் நினைவாற்றலும், நின் பொருள் சேர் புகழையே விரித்துப் பேசும் இயல்பமைந்த பல காப்பியங்களின் தொகுதியும், ஒலியமைந்த எழுத்து முதலாகச் சொல்லப்படுகின்ற ஐந்து இலக்கணங்களையும் முழுமையாகக் கற்று முதிர்ந்த தமிழ்ப் புலமையும், நல்லொழுக்கத்தையும் தந்தருளி, இப்பிறப்பில் தோன்றும் அகப்பற்று, புறப்பற்று ஆகிய இருவகைப் பற்றுக்களையும் விலக்கி, ஆணவம் கன்மம் மாயை என்னும் முதிர்ந்த மும்மலங்களையும் நீக்கித், தன் முனைப்பைத் தவிர்த்து, திருவருள் உணர்வுடன் ஞான நூல்களை ஆராயும் பழைய அடியாருடன் [எளியேனையும்] சேர்ப்பித்து அவ்வடியவர் நுகரும் பேரின்பத்தை எளியேனும் நுகருமாறு செய்து, நெடுந்தூரத்தும் நறுமணம் கமழும் அழகிய தாமரையனைய திருவடிகளைக் கண்டு மகிழுமாறு செய்து எளிய என்னை ஆளாகக் கொண்டருளி அடிமையாகிய எனக்கு முன்னின்று திருவருள் வழங்குவீராக [எ-று].

blic domain. Digitization Muthulakshmi Research Acad

வினை நீங்குங்காறும் பிறவி தொடர்தலின் 'பல்கோடி சென்மப்பகை' என்றார். 'எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்' என மணிவாசகரும், மேனாள் அகில லோகமும் அளந்த யோனியும், நிகிலமும் தோன்ற நீ நினைந்த நாள் தொடங்கி, எனைப் பல யோனியும் நினைப்பரும் பேதத்து, யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித், தாயராகியும் தந்தையராகியும் வந்திலாதவர் இல்லை யான் அவர், தந்தையராகியும், தாயராகியும், வந்திராததும் இல்லை. முந்து, பிறவா நிலனும் இல்லை அவ்வயின் இறவா நிலனும் இல்லை பிறிதல், என்னைத் தின்னா உயிர்களும் இல்லையானவை. தம்மைத் தின்னா[து] ஒழிந்ததும் இல்லை. அனைத்தே காலமும் சென்றது யானிதன் மேலினி இளைக்கமா[று] இலனே' எனப் பட்டினத்துப் பிள்ளையாரும், 'எழுகடல் மணலை அளவிடின் அதிகம் எனது இடர்ப்பிறவி' என அருணகிரிநாதரும் இப்பிறவிப் பிணி தொடர்ந்து வருமாற்றை அருளுதல் காண்க. காரண காரியத் தொடர்ச்சியாய்த் தடையின்றி வருதலின் பிறவிப் பெருங்கடல் எனத் திருவள்ளுவரும் கூறியருளுவர். அவம் இருத்தும்– இழிநிலைக்கு ஆளாக்கும். தொடங்கிய செயல்கள் இடையீடுபடின் அதனால் பொருள், உடல், உழைப்பு முதலிய அனைத்தும் கெடுவதுடன் மனத்தளர்வும் ஏற்படும். அயலார் பழிப்பும் உளதாகும். ஆதலின் 'அவமிருத்தும் பல்கோடி விக்கினமும்' என்றார். அவ+மிருத்தும் எனப் பிரித்து காலமல்லாக் காலத்தில் ஏற்படும் இறப்பு எனப் பொருள் கூறுவாரும் உளர். பாதகம்–பாவச்செயல்கள். செய்வினை–மந்திரங்களைக் கொண்டு பிறர் செய்யும் தீங்குகள். பசாசு–பேய். பூதம்–விகார வடிவைப் பெற்றுப் பிறருக்குத் தீங்கு செய்வது. உல்லாசமாக– மகிழ்ச்சியோடு கூட. இறைவன் உளத்தில் மகிழ்ச்சியோடு வீற்றிருக்க வேண்டுமாயின் மனம் மொழி மெய்கள் ஆகிய மூன்றும் தூய்மை பெற்றுத் திருவருளில் தோய்ந்து இருத்தல் வேண்டும். அவ்வாறு இருப்பின் அவன் இனிது எழுந்தருளியிருப்பன். இதனைக் 'கருமதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம். காமம் வெகுளி கழிபெரும் பொய்யென்னும், தூய்மையின் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை, அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறன், மையிருள் நிறத்து மதனுடை அடுசினத்து, ஐவகைக் கடாவும் யாப்பவிழ்த்[து] அகற்றி, அன்பு கொடு மெழுகி அருள்விளக் கேற்றித் துன்ப இருளைத் துரந்து முன்புறம், மெய்யெனும்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

விதானம் விரித்து நொய்ய, கீழ்மையில் தொடர்ந்து கிடந்தஎன் சிந்தைப் பாழறை உனக்குப் பள்ளியறையாக்கிச் சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு, எந்தை நீ இருக்க இட்டனன்' எனவரும் பட்டினத்துப் பிள்ளையாரின் திருவாக்கால் அறியலாம். ஆசு முதல் நாற்கவி– ஆசுகவி, மதுர கவி, சித்திர கவி, வித்தார கவி, என்பன. ஆசுகவி– ஒரு புலவன் இவ்வெழுத்தானாதல், இச்சொல்லானாதல், இப்பொருளானாதல், இவ்வணியானாதல், இப்பாட்டானாதல், இவ்வெழுத்து ஆதி இவ்வெழுத்து அந்தம், இச்சொல் ஆதி இச்சொல் அந்தமாகப் பாடுவாய் என்று கூற, அப்பொழுதே அவன் கருத்துக்கு ஒப்பப் பாடுவதாகும். மதுரகவி– சொல்லிலக்கணத்திலும் பொருள் இலக்கணத்திலும் வழுவாமல் எண்வகை மெய்ப்பாடு தோன்ற எதுகை மோனை முதலிய தொடை நலம் வாய்ப்பத் தன்மை உவமை முதலிய அணிநலம் அமைய உள்ளத்து உள்ளே கொள்ளும் அமுது எனக் கேட்போர் தமக்கு இனிமை மேற்படப் பாடப்படுவதாகும். சித்திரகவி– மடக்குகள் கோமூத்திரி முதலாகச் சொல்லப்படுகின்ற சித்திரக் கவிகள் ஆகியவை அமையப் பாடுவதாம். வித்தாரகவி– தொடர் நிலைப்பாட்டாகவும், பல அடியான் நடக்கும் தனிப் பாட்டாகவும், வருவதாம்,'நாளும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும் பாடும் பணியும் பணித்தருள்வாய்' எனச் சகலகலாவல்லியிடத்தும் அடிகள் இவ்வேண்டுகோளை வேண்டுவர். அட்டாவதானம்– எண்வகை நினைவாற்றல், ஒரேகாலத்தில் கேட்கப்படும் எண்வகை வினாக்களையும் மனத்தில் நிறுத்திப் பின் அவை ஒவ்வொன்றற்கும் முறையாக விடையிறுத்தல் 'சொல் விற்பனமும் அவதானமும் கவிசொல்லவல்ல நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்' என இதனையும் சகலகலாவல்லியிடத்து அடிகள் வேண்டுவர். காப்பியங்கள் சில இறைவன் பொருள் சேர் புகழையன்றி உலகியல் உணர்வுமீதூரக் கூறுவனவும் உள. அத்தகைய காப்பியங்களைப் படிக்காமல் இறைவன் புகழ் மணக்கும் காப்பியங்களையே படிக்கவேண்டுமென அடிகள் வேண்டுகின்றார். எழுத்து முதலாய ஐந்திலக்கணங்களையும் அறிதல் மொழித் திறத்தை முட்டின்று உணர்வதற்கு ஏதுவாகும். மொழித்திறத்தை முழுமையாக உணர்தலின்பயன் திருவருள் உணர்வைப் பெறுவதே ஆம்.

blic domain. Digitization Muthulakshmi Research Acad

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பான்ஆகும் -
மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூல் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்."

என்னும் பாடலால் இவ்வுண்மை விளங்கும். எனவே செய்யுள் நிகழ் சொற்றெளிவும், செவ்விய நூல் பல நோக்கும் மெய்யுணர்வை அடைதற்கு வாயிலாம் என்பது கருத்து. எனவே நூல் உணர்வு, நுண்ணுணர்வு ஆகியவற்றுடன் திருவருளுணர்வும் ஒன்றியிருப்பதே பழுத்த தமிழ்ப்புலமையாகும். எத்துணை நுண்ணறிவு இருப்பினும் அதனோடு ஒழுக்கம் இலதாயின் அத்துணையும் பயனிலவாம். 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்', அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கட் பண்பிலா தார்', 'பலநல்ல கற்றக் கடைத்தும் மனம் நல்ல ராகுதல் மாணார்க்கு அரிது' என வரும் திருக்குறட் பாக்கள் ஒழுக்கத்தோடு இணைந்த அறிவே அறிவெனச் சாற்றுதல் காண்க. இருவாதனை- அகம் புறமாகிய இருவகைப் பற்றுக்களால் வரும் துன்பம். யான் என்பது அகப்பற்றாம். எனது என்பது புறப்பற்றாம். தம்மை விடுத்து - தன்னறிவால் காண்பதை விடுத்து. இறைவனே உள்நின்று செய்வித்தும் அறிவித்தும் அருளுகின்றான். 'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே' என அப்பர் அடிகளும், 'பாட்டுவித்தால் பாடுகின்றேன்' என இராமலிங்க அடிகளும் அருளுவது இதனைப் புலப்படுத்தும். இவ்வாறின்றித் தன்னறிவினால் அனைத்தையும் காணவும் செய்யவும் இயலும் எனக் கருதுவது பேதமையாம் 'தன்னறிவு அதனால் காணும் தன்மையன் அல்லன் ஈசன்' என்னும் சித்தியாரும். ஆயும்- திருவருள் உணர்வுடன் ஞான நூல்களை ஆராயும். பழவடியார்- தன்முனைப்பை விடுத்துத் திருவருளில் தோயும் பயிற்சியும் பக்குவமும் உடையவர் இவர்கள் கூட்டுறவு மனத்தைப் பக்குவப்படுத்தற்கும் ஒன்றியிருந்து நினைப்பதற்கும் உறுதுணையாகும். 'பழுத்த மனத்தடியார்' என மணிவாசகர் அருளுவதும் இத்தகைய அடியவரையே ஆம். அத்தகையோர்

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

தம் மனப்பக்குவத்தானும் ஒருமை உணர்வானும் இறைவன் திருவருளிலேயே திளைத்து அதனாலாய பேரின்பப் பயனைப் பெற்று மகிழ்பவர் ஆவர். 'சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்' எனவரும் திருவாசகம் இத்தகைய அடியவரின் பேரின்பப் பெருவாழ்வை விளக்கும்.

இத்தகைய பேரின்பத்தைத் தாமும் அவர்களுடன் பகிர்ந்து நுகரவேண்டும் என்பார், 'தோயும்பரபோகம் துய்ப்பித்து' என்றார். ஆதலால்தான் அருளாளர் அனைவரும் பழைய அடியாரிடத்துக்கூடிநிற்பர். மேலும் கூட்டுமாறும் வேண்டுவர். இத்தகைய வரங்களையெல்லாம் படிப்படியாக வேண்டிய அடிகள் நிறைவாக இறைவன் திருவருட்காட்சி எஞ்ஞான்றும் முன்னின்று அருள வேண்டும் எனவும் வேண்டுகின்றார். இதுவே உயிர்கள் முடிவாகப் பெறுதற்குரிய பயனாகும். இறைவனின் திருவடியே உயிர்களை உய்வித்து ஆட்கொள்ள வல்லதாகும். 'தாள் தாமரை காட்டித்தன் கருணைத் தேன் காட்டி' என மணிவாசகரும் அருளுவர். அத்தகைய திருவடியின் மணம் அண்டம், பிண்டம் ஆகிய அனைத்திடங்களிலும் கமழும். ஆதலின் 'சேய கடியேற்கும் பூங்கமலக் கால்' என அத்திருவடிகளின் அருள் மணத்தைப் போற்றிக் கூறினார்.

கந்தர் கலிவெண்பா உரை நிறைவு பெற்றது.

c domain. Digitization Muthulakshmi Research Ac

ublic domain. Digitization Muthulakshmi Research Acad

c domain. Digitization Muthulakshmi Research Ac